ஓம்

சச்சிதானந்தகுருவேநம:

தெய்வீகத்தன்மைபொருந்திய

# வேமன்ன யோகீஸ்வரர்

ஸ்வாநுபூதிரசாவேசத்தால்

உலோகோபகாரமாய்

திருவாய்மலர்ந்தருளிய

## தெலுங்குபத்தியங்கள்-௱.

இஃது

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசாரியராய் விளங்கும்

நகுஷிறைமூர்த்திசுவாமிகளது தொண்டனும், திரிபு

ராம்பிகை அடிமையும், ஹிந்து ரிலிஜியஸ்

இஸ்கூல் மானேஜருமாகிய

**சீதாரும்பிரஸாத் அவர்களால்**

தமிழ்எழுத்துகளால் எழுதப்பட்டு

சுலபநடையாய்

உரையும் இயற்றப்பட்டு

பூவிருந்தவல்லி

**சுந்தரமுதலியாரது**

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1893.

Registered Copy Right.

ஓம்

சச்சிதாநந்தகுரு

# ரிஜஸ்தர் அரிவிப்பு.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில், இந்த (வேமன்னபத்தியத்தை) தமிழில் உரையுடன் அமைத்தவராகிய சென்னை பெரம்பூரைச்சார்ந்த பெருமாள்பேட்டை வல்லம் பங்காருசெட்டிவீதி 29 - வது, நெம்பர் வீட்டிலிருக்கும் ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவிராஜகாசாரியராய் விளங்கும் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளது தொண்டரும், திரிபுராம்பிகை அடிமையும், ஹிந்துரிலிஜியஸ் இஸ்கூல் மானேஜரும் ஆகிய (சீதாரும்பிரஸாத்) அவர்கள் அனுமதியின்றி அச்சிற்பதிப்பிக்கின்றவர்களும் பதிப்பிக்கும் அச்சுக்கூடத் தலைவர்களும் 1887ஷ்த்து 25 - வது ஆக்டின் 20 - வது பிரிவில் 6 - வது விதியின்படி மேற்படியார்களால் செய்யும் நஷ்டத்திற் குத்திரவாதிகளாகவும், பினால் கோர்ட்டார் அவர்கள்கேள்விக்கு ஜவாபுதாரிகளாகவு மிருப்பார்களென்று யாவரும் தடையின்றி கவனிப்பீர்களாக,

இப்படிக்கு,

சீதாரும்பிரஸாத்.

Manager, Hindu Religious School

Purasawalkum.

45875

**Madras.**

## விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர் சென்னை பெரம்பூர்போஷ்டைச்சார்ந்த பெருமாள்பேட்டை வல்லம் பங்காருசெட்டி வீதி 3-வது, நெ, வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சுந்தரவிலாச அச்சுக்கூடத்தலைவர் பூ. சு. குப்புசாமிமுதலியாரிடத்தில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்,

இதன்விலை அணா ௪.

ரிப்ளேகார்ட்எழுதினால்பதில்சங்கதிகிடைக்கும்.

இப்படிக்கு,

பூ. சு. குப்புசாமிமுதலியார்.

ஓம்

சச்சிதாநந்தாயநம:

# வேமன்ன யோகீஸ்வரரின் சரித்திரம்,

புகழ்பெற்றோங்கும் பரதகண்டத்தின் தென்றிசையில் கோதாவரி கிருஷ்ணை மகாநதிகளின்மத்தியில் மசிலிபந்தர்ஜில்லாவைச்சேர்ந்த கொண்டேடி துர்கமென்னும் மலைக்கு அரசனாகிய அன்ன வேமாரெட்டி என்பவரின்சகோதரரான வெர்ரி வேமன்ன எனபெயருடைய யோகீஸ்வரரின்வரலாறு:—

பெரியவேமாரெட்டி என்பவர் கொண்டேடியென்னும்மலையில்வசிக்கும் ஜனங்களை தருமசாஸ்திரத்தின்பிரகாரம்ஆறிலொருபங்கு விளைவில் கப்பம்வாங்கிக்கொண்டு மனுநீதி பிசகாமல் (தாய்தந்தையர் பிள்ளைகளைவளர்க்கிறதுபோல்) குடிகளைபாதுகார்த்து வந்தனர்.

வெர்ரி வேமன்னயென்பவர் அதிபதியின் கனிஷ்டசகோதரனானதினால், வேலைவெட்டிகள் ஒன்றுமில்லாமல் வேசியின்தொடர்ச்சியதிகரித்து, அவளது மோகபாசத்தில் சிக்கி விவாகத்தைவெறுத்து அவள் கேட்டதையெல்லாம் தடையில்லாமல் கொடுத்துக்கொண்டு இரவும்பகலும் அவளுக்குத் தொண்டு பணிவிடைசெய்துக்கொண்டு இருந்தார்.

அந்த வெள்ளாட்டியும் வெர்ரி வேமன்னாவை ஓட்டாண்டியாக்கக் கருதி அவர் அரண்மனையிலுள்ள ஆபரணங்களையெல்லாங் கொண்டுவரும்படி மன்றாடுவாள். வேமன்னாவும் வீட்டிலுள்ள நகைகள் யாவற்றையும் தடையில்லாமல் திருடிக்கொண்டுவந்து கொடுப்பார். இவரது தமயன் பத்தினி இவரை சிறுவயதிலிருந்து புத்திரபாவம்வகித்து இவரை வளர்த்து வந்தமையால், இவர் என்னகேட்டபோதிலும் தடை யில்லாமல் கொடுத்துக்கொண்டு, அவர்மனது நோகவைக்காமல் பாதுகார்த்துவந்தாள்.

ஒரு நாள் வேசியானவள் வேமன்னாவைப் பார்த்து ஓ வேமன்னா? நீ உன் அண்ணியார் மூக்கில் போட்டிருக்கும் நவரத்தினகசிதமான மூக்குத்தியைக் கொண்டு வந்து கொடுத்தால் என்னுடன் நீ மன்மத கிரீடைசெய்யலாம? இல்லாவிடில் இந்த க்ஷணமே இவ்விடம் விட்டுப் போகவேண்டியது. அந்த மூக்குத்தியைக் கொண்டுவராமற்போனால் இவ்விடத்திற்கு வரக்கூடாது, வந்தால் துரத்திவிடுவேன். சீக்கிரம்போய் கொண்டு

வாவென்று துரத்தினள். வேமன்னாவும் அவளுக்கு தன்னால் கூடியவரையில் தாழ்மைச் சொல்லியும், அவள்கேளாததினால் தனக்கு ஒன்றுந்தோன்றாமல், ஓ தெய்வமே! நான் என்னசெய்வேன், மூக்குத்தியை நான் எவ்விதத்தில் திருடிக் கொண்டு வருவேன், அது எப்பொழுதும் என்அண்ணியார்மூக்கில் இருக்கிறதாச்சுதே, கேட்டால் கொடுப்பாளா? இவளோமூக்குத்தி தந்தாலொழிய சேரேனென்றாளே. இதற்கென்னசெய்வேனென்று மனோவியாகூலத்துடன் தன்அறைக்குள்வந்து துப்பட்டியைபோர்த்துக்கொண்டு அன்னம்புசியாமல் படுத்துக்கொண்டு அதேசிந்தையாயிருந்தார். 45875

பிறகு அண்ணியாரும் ஏன் வெர்ரிவேமன்ன சாப்பிடவரவில்லையென்று, வேலைக்காரரை வேசியின்வீட்டில்பார்த்துவரும்படியனுப்ப, அவர்களும்தேடிப்பார்த்து, எங்குங்காணாமல் இவர்படுத்திருக்கும் அறைக்குள்வந்துபார்த்து,இவரதுகோலத்தைக்கண்டு, தன்அரசிக்குச்சொன்னார்கள். அந்தஅம்மாளும்வந்து இவர்முக்காடுயிட்டு தூங்குவதைக்கண்டு தட்டி யெழுப்பி புசிக்கும்படிக்குச்சொன்னாள். இவர்ஒன்றும்மறுமொழி சொல்லாமல் வியாகூலமாயிருக்கிறதைத் தெரிந்துக் கொண்டு ஓ அப்பா! ஏன் நீ மிகவும் வியாகூலமாயிருக்கிறாய்; உனக்கு என்னவேண்டியது அது என்னாலியலுமாகில்தடையின்றிகொடுக்கிறேன். எழுந்துஅமுதுண்ணுமென்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். அப்பொழுது வெர்ரிவேமன்னா, தாயே!எனக்கு உன்மூக்குத்தியைக் கொடுத்தால் தான் நான் புசிப்பேன் இல்லாவிடில் நான் புசியேன். அந்தவேசியும் உன் மூக்குத்தியைக் கொண்டுவராமல் என்னை தன்மனைக்குவரவேண்டாமென்றாள் ஆதலால்அந்தவேசியைவிட்டு ஒருநாழிகைஒருயுகமாய்க் கழிக்கிறேன், நீமூக்குத்தியைக்கொடுத்தால்நான்புசித்து அவளுடைய சகைக் கொடுத்து அவளுடன் சுகித்திருப்பேன. இல்லாவிடில்இவ்விடமே உயிரை விடுகிறேனென்றுசொன்னார்.

அதைக்கேட்டு அண்ணியாரும் யிவருக்கிருக்கும் வேசியினமையலறிந்து ஓ புத்திரா! நான் தடையில்லாமல் அந்த மூக்குத்தியைக் கொடுக்கிறேன். ஆனால் எனக்கு ஒரு வாக்கு தத்தம் நீ கொடுக்கவேண்டியது. அதாவது நீயிந்த மூக்குத்தியை, அவளை நிர்வாணமாக வரச்சொல்லி இரண்டுகால்களையும் பரப்பி நிற்கச்சொல்லி நீ பினால் நின்று இரண்டுகாலின் மத்தியிலே உன்கையால் அவளுக்குக் கொடுக்கவேண்டும். அவள்அப்படியே குனிந்து கையால்வாங்கிக் கொள்ளவேண்டியது. இந்தபிரகாரம் நீகொடுக்கிறேனென்று நிட்சயமாய்ச்சொன்னால்இதோ

தடையில்லாமல் கொடுக்கிறேன் வாங்கிக்கொள் என்றுதன் மூக்கிலுள்ள மூக்குத்தியைக் கழட்டி வேமன்னாகையில் கொடுத்தாள். அவரும் அப்படியேஆகட்டுமென்று அதை வாங்கிக்கொண்டு விரைவாய்வேசியின் வீட்டிற்கு வந்து நகையைக்காட்டி அண்ணியார் கட்டளையிட்டபிரகாரம் வாங்கிக் கொள்ளென்றுசொன்னார். வேசியும் அதற்கிசைந்துவஸ்திரஹீனமாய் நின்று காலைப்பரப்பி இரண்டுகாலின் மத்தியமாய்வேமன்னகொடுக்க நகையைக் குனிந்து வாங்கிக்கொண்டாள்.

வேமன்ன ஸ்திரீலோலனானதால் மன்மதாலயத்தைப்பார்த்து நாற்கால் ஜந்துவுக்கிருக்கிறாப்போல் தோன்றினதினால் வெறுப்புக்கொண்டு ஒன்றும் அவளுடன்பேசாமல் திடீலென்றுதனது மனைக்கு ஏகி, தன் அண்ணியைக்கண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, தாயே! நீயேஎனக்கு ஆசான்; மோகபாசம் பற்றறுக்க வழிகாட்டினாய் என்று பலவிதமாகத் தோத்திரஞ்செய்து வீடுவாசலை விட்டுப் பயித்தியக்காரனைப்போல் குப்பையிலும் வீட்டுத்திண்ணையின்பேரிலும் படுத்துக் கொண்டும், திரிந்துக்கொண்டும் இருந்தார் இப்படி யிருக்கும்பொழுது ஒருநாள் தான்திடீரென்று அரண்மனைக்குவந்து தன்அண்ணியாரின் வலது ஸ்தனத்தின்பேரில நகத்தால் யிரத்தம்வரக் கிறிப் போய்விட்டார். அவ்விடத்திலுள்ளவர் யாவரும் தூஷித்தார்கள். இந்தபுண்ணியவதி அவரை தூஷியாதீர்கள்? அவர் ஒருகாரியத்தைப் பற்றி செய்திருப்பார் என்று தன்நாயகன்முதலானவர்களுக்கு சமாதானம் சொன்னாள். மூன்றாம் நாளில் இந்த உத்தமி சலத்திற்குப் போக அவ்விடத்தில் ஒருகொடிய அரவங்கடித்து விஷமேறி மூர்ச்சை யாகினாள். எல்லோரும் இறந்தாள் இறந்தாள் என்று அழ ஆரம்பித்தார்கள். சிலநேரத்திற்குள் அந்த விஷமெல்லாம வேமன்ன கிறின காயத்தின்வழியாக வெளிக்குவந்து விட்டது விஷம் வெளியில்வந்துவிடவே தூங்கினாப்போல் எழுந்திருந்து வேமன்ன கிறினதற்குக் காரணம் இதுவென்று அவ்விடத்தில் விஷம்கக்கியிருக்கிறதையும் எல்லாருக்கும் காட்டினாள்.

சிலநாள் சென்றபிறகு வேமன்ன தனதுமகிமை எல்லாருக்கும் பிரியக்மாகத் தெரியக்காட்டும்பொருட்டு, தன்தமயனாரிடத்தில்ஒருகாணிபூமி வாங்கிக்கொண்டு சகலரும் தானியங்களை பயிர்வைக்க, இவர் ஆற்றுத்துமட்டங்காயைப் பயிர்செய்தார். இதைக்கேட்டு அவரதுதமையனார்நகைத்து ஆற்றுத்துமட்டங்காயைப்பயிர்செய்கிறான், நீயும்உன்மச்சினனுமதைசாப்பிட்டு

ஜீவியுங்கள் என்று! தன்மனைவியைப்பரிகாசம்செய்தார். அந்த பதிவிரதையும் தன்நாயகனைப்பார்த்து, சுவாமி! அப்படிசொல்லாதீர்கள்; அவர்மகானுபாவர், வீண்காரியத்தைசெய்யமாட்டார், அதில் பிரயோஜனமிருக்கும் நீரேமுடிவில் அறியப்போகிறீரென்றுசொன்னாள். ஆற்றுதுமட்டங்காய் பயிரானஉடன் ஒரு கிழவி அந்தவழியில்போக அவளைப்பார்த்து, ஓகிழவி, எங்கே போகிறாய், என்று வேமன்னகேழ்க்க அந்தக்கிழவிதான்கூலிக்கு போகிறதாய்ச்சொல்ல, தன்னிடத்தில் இந்தஆற்றுத்துமட்டங்காய்களை அறுத்தால் கூலிகொடுக்கிறேனென்று சொல்ல அவள் அதற்கிசைந்து அன்றையதினம் சாயம்காலம் வரையில் அந்த காய்களையறுத்து பொழுதுபோன வுடன் கூலியைக்கேழ்க்க ஒருகாயை எடுத்து அவள்கையில் கொடுத்தார். அவள் அதைவாங்கிக்கொண்டு ஒன்றுஞ்சொல்லாமல் மனக்கிலேசமாய்த் தன்வீட்டிற்குவந்தாள். கிழவியின் பிள்ளைகள்தாயே! ஏன் வியாகூலமாயிருக்கிறாய், கூலிவேலை ஒன்றும் அகப்படவில்லையா? என்றுகேட்டார்கள். பிள்ளைகளேநான்யென்ன சொலவது தெரியாமல் வெர்ரிவேமன்னயிடத்தில் கூலிக்குஆற்றுத்துமட்டங்காய்களை அறுத்தேன். அவர் கூலி கொடுக்காமல் இந்த ஆற்றுதுமட்டங்காயைத் தந்தார். இதை நான் என்ன செய்கிறதென்று அவர்கள் முன்னிலையில் எடுத்தெறிந்தாள். பிள்ளைகளில் ஒருவன்கோபத்துடன் வேமன்னவை வைதுக்கொண்டு அந்தக்கனியை விசரிநடுவீட்டில் பூமியின்பேரில் மோதினான். மோதின உடன் அதுபிளந்து அதின் விதைகள் சுவர்ணமயமாய் பூமியின்மேல் சிதரிவிழுந்ததுகள். பொன்விதைகளை அவர்கள்கண்டமாத்திரத்தில் மிகவாச்சரியங்கொண்டு. மறுநாள் அதிகாலையில் வீட்டிலுள்ளவர்களெல்லோரும் ஆற்றுத்துமட்டங்காய்களை கூலிக்கி அறுக்கவந்தார்கள். அன்றையபொழுதானஉடன் வேமன்னவுக்குத்தெரியாமல் ஒவ்வொருவரும் நாலு காய்களைத்திருடி யொளித்துக்கொண்டு, வேமன்ன தன் ஹஸ்தத்தால் பிரதிமனிதனுக்கு வொவ்வொருகாய் கூலி கொடுக்க அவர்கள் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு ஆனந்தபாவசமாய் வந்துசேர்ந்தார்கள். மனைக்குவந்தபிறகு தாங்கள் தெரியாமலொளித்துவைத்த காய்களை பிட்டுப்பார்க்க அதுகளெல்லாம் விதைகளாக யிருக்கக்கண்டு மனக்கிலேசமாய் வேமன்ன கொடுத்த கனியைபிட்டார்கள், வேமன்ன மகானுபாவ ரானதலால் அவர் கையால்கொடுததால்தான் அது பொன்விதைகளாகிறது, இல்லாவிடில் நற்கடையாகவேயிருக்கிறது. ஆதையால்நாம்இனிமேல் திருடப்படாது, கொடுத்ததைச் சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டுவரவேண்டியது என்றுதீர்மானித்துக்கொண்டுஇவ

ர்கள் நாள்தோறும் ஆற்றுத்துமட்டங்காய்களை அறுக்க கூலிக்குப்போவார்கள். பொன்விதைகளாகிற சமாச்சாரம் எல்லாருக்குந் தெரியவந்ததால் அம்மலை வாசிகளெல்லோரும் ஆற்றுத்துமட்டங்காய்களை அறுக்க கூலிக்குப்போவார்கள். வேமன்னுவும்பொழுதானவுடன் வொவ்வொருகனியைப் பிரதி கூலிக்காரனுக்குகொடுப்பார்.

இவ்விதம் சிலநாளைக்குள்ளாக துமட்டங்காய்களையெல்லாம் அறுத்து இரண்டுப்போராய்க்குவித்து அரண்மனைக்கேகி தன் அண்ணியைப்பார்த்து தமயனைஅவ்விடத்திற்கு வரும்படியாகச் சொல்லச்சொன்னார். அப்படியே அந்த பதிவிரதையும் தன்கணவன் ஆசாரவாசலைவிட்டு அரண்மனைக்குள் வந்தவுடனே வேமன்னசொன்னதைச்சொல்லி போகச்சொன்னாள் தமயனார் மிகவும்பரிகாசஞ்செய்துஎனக்குஆற்றுத்துமட்டங்காய்வேண்டியதில்லை; அவனுக்கும் உனக்குந்தான் பயித்தியம் பிடித்திருக்கிறது; நான்போகமாட்டேன்யென்றார்.

அப்பொழுது அந்தவுத்தமி வேண்டிய உபசாரவார்த்தைகள்சொல்லி அவரதுபிரதாபங்களைத்தெரிவித்து அவ்விடத்திற்குஅனுப்பிவைத்தாள். தமயனார் வருவதை தான்கண்டு யெதிர்நோக்கிச்சென்று அழைத்துக்கொண்டுவந்து இந்ததும்மட்டங்காய் போர்களிரண்டையும்தன்கையால்தொட்டு, ஒருபோரைத் தாங்கள் எடுத்துக்கொள்ளுங்கள், மற்றொன்றை ஏழைகளுக்கு வேண்டியவரையில் தானதருமங்கள் செய்யுங்களென்று வேமன்ன சொன்னார். அதை அவர் அங்கிகாரம் பண்ணிக்கொண்டு ஒரு கனியையெடுத்து புட்டுப்பார்த்தார். அதின் விதைகள் பொன்விதைகளாக யிருக்கக்கண்டு ஆச்சரியமும்சந்தோஷமும் மேலிட அவரை மகானுபாவரென மதித்துதோத்திரஞ்செய்து, அவர் கட்டளையின்படி பாதிபொன்னை தானதருமங்கள் செய்து, மற்றப்பாதியை தான்யெடுத்துக்கொண்டுஅவர் என்னசொன்னபோதிலும் தடையில்லாமல் செய்துக்கொண்டிருந்தனர்.

சிலநாள்சென்றபிறகு தமயனாரும் அவரதுபத்தினியும் சிவலோக பிராப்தி அடைந்தார்கள். வேமன்ன சுவாமிகளின் பிரபாவம் எங்கும் பரவியது. இவர் குப்பையிலும் மேடுகளிலும் வீட்டுத் திண்ணைகளிலும் கால்வாய்களிலும் சேற்றிலும் புரண்டுக் கொண்டு வாய்க்கு வந்தபடி பத்தியங்களைச் சிலதைச் சொல்லிக்கொண்டும், சிலதை குப்பையில் கிடந்த, பானை ஓட்டில் எழுதிக்கொண்டும், இருப்பார், இவர்சொல்லிய பத்தி

யங்கள், இவ்வளவென்று கணக்கிட பிரமனுக்கும்முடியாதெனமானிடரால் சொல்லிமுடியுமா பிரதிபத்தியமும் நான்கு விதபொருளை விளைவிக்கும். சிலனாள் வேமன்ன சுவாமிகள் அணிமாதி சித்துகள் ஆடி லோகோபகாரமாய் பத்தியங்கள் பாடிமறைந்தனர்.

இந்த வேமன்னசுவாமிகளின் மகிமைகள் அனேகமுண்டு அதுகளையெல்லாம் விவரித்துரைக்க கிரந்தம் விஸ்தீரணமாகுமாதலால் சங்கிரகமாக இந்தஅடிமை யெழுதலாச்சுது

பக்தி வைராக்கிய ஞானங்களை கைகொண்ட வேமன்ன சுவாமிகள் சுவானுபூதி ரசாவேசத்தால் அருளிச்செய்த பத்தியங்கள் திராவிடதேசத்தாருக்கும் தெரியும்படிக்கு தமிழ்யெழுத்தால் தெலுங்குபத்தியங்களும் தமிழ் உரையுமாய் பயித்தியக்காரனைப்போல் இந்த அடிமைபிரசுரித்திருக்கிறேன்.

ஏனெனில்மகாசமுத்திரத்திற்குமுன் வாய்க்கால் ஓடுவதுபோல சகலகலைவல்ல பாண்டித்திய கவிசிரேஷ்டர்முன் இலக்கண இலக்கியமென்னும் பொக்கிஷாச்சாரங்கட் தெரியாத யான் உலோகோபகாரத்தின்பொருட்டு வேமன்ன மகானுபாவரின் பத்தியங்களில் நூறை உரையுடன்யெழுதி இருக்கிறேன். அதிற்செறிந்த வழுக்களைப் பாராட்டாமல் அன்னப்பறவைபாலோடு சேர்ந்தநீரைப் பிரித்தருந்துவதுபோல இதனுட்கருத்தை யறிந்து பற்றில்லாசொற்களின் குற்றம்பொறுப்பீரென்று பிரார்த்திக்கின்றேன்.—இதுநிற்க இலக்கணஇலக்கியமாகஉரைசெய்வோமாகில் அப்பொருள் கல்விமான்களுக்கல்லது பாமரர்களுக்கு பிரயோசனப்படாது இது ஞானகாண்ட மாதலால் சிறியபாலர்கூட வாசித்தமாத்திரத்தில் உரைதெரிந்துக்கொள்ளும்படியாக இலேசான தமிழ் சொற்களால் உரை செய்யப்பட்டது.

இந்தஅடிமை வேமன்ன மகானுபாவரது கடாக்ஷத்தாலும், ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசாரியராய் விளங்கும் தக்ஷிணாமூர்த்திசுவாமிகள்கிருபையாலும், திரிபுராம்பிகை கருணையாலும், ஜீவன்முத்தரது ஆசீர்வாதத்தாலும், பெரியவர்களது சேர்க்கையாலும், தெரிந்தவாறு உரைசெய்தேன்.

ஸ்ரீமத் தக்ஷிணாமூர்த்திசுவாமிகளது
அடிமையாகிய

சீதாராம்பிரசாத்.
Manager Hindu Religious, School
Purasawalkum, Madras.

ஓம்

சச்சிதானந்தகுருவேநம:

# வேமன்னபத்தியங்கள்

## மூலமும் - உரையும்.

ஸ்ரீகரம்புக வேமன ஜெப்பினட்டி
பத்தியமுல நெவ்வடேனியு படணசேயு
நட்டிபுருஷுண்டு மனஸ்ஸுன னிட்டி தனுசு
ஜெப்பரானட்டி வஸ்துவு ஜேருவேமா.

(இதன்பொருள்.)

சத்தியஞானானந்த பரப்பிரம்ம சுரூபராய், மாயாரகிதராய், (தத்துவமசியென்னும்) சுருதிஅருத்தத்தை லக்ஷியார்த்தமாகக் கைப்பற்றினவரான (**வேமனானந்த குருவால்**) சுவானுபூதி ரஸாவேஸத்தால் உலோகோபகாரமாய் அருளிச்செய்த பத்தியங்களை, எந்தமனிதனுகிலும் சாதனசதுஷ்டய சம்பத்தியுடன் அதாவது, (நித்தியா நித்திய வஸ்து விவேகம்; இகமுத்தரார்த்த பலபோகவிராகம், சமாதி ஷட்க சம்பத்தி மோக்ஷேச்சை) தாபத்திரியங்களையோட்டி, ஈஷணத்திரியங்களை அறுத்து, பத்தி வைராக்கியத்தைக் கைக்கொண்டு சிரத்தையுடன் வாக்கியார்த்தமாகப் பாராமல் லக்ஷியார்த்த மாகக் கொள்வானுகில் ஜீவன்முத்தனாய் மனோவாக்குக்கு எட்டாத (சுவேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, சம்சக்தி நாமிகை, பதார்த்தபாவனை) என்னும் ஞானபூமிகளுக்கு மேலானபதவியாகிய துரியாதீதத்தில் சச்சிதானந்தரூபனாய் விளங்குவான் என்றவாறு.

இந்த பத்தியத்தில் (ஸ்ரீகரம்புக) என்று சொல்வதினால் அழிவில்லாத நிலையுடன் என்றுபொருள். ஞானாசாரியரெல்லோரும் அதிகாரி எவனோ? அவனுக்கு மாத்திரம் வேதாந்த விசாரணை வேண்டுவதல்லது மற்றவர்கள் கைப்பற்றக் கூடாதென்றனர்கள். அதிகாரி யாரென விசாரிக்கையில், காமாதி பதின்மூன்று குணங்களை அறுத்து, அதின் காரணமாகிய மஹதாதிஅகங்காரதத்துவங்களை, (நெல்லில்உமியைவேருக்கி சஸ்

யங்களை எடுத்துக்கொள்வதுபோல்) ஆராய்ச்சியில் புறம்பாக்கி நான்கு சாதனங்களை பிரம்ம ஞானிகளின் சேர்க்கையால் சாதித்துக் கொண்டு வருபவன்யென்று பொருள். அப்பேர்ப்பட்ட ஒப்பில்லாத நாசரகிதமானசெல்வத்தை எவன கையாளுகிறானோ? அந்தசத்புருஷனுக்கு (வேமனானந்தகுருவின)செய்யுள்களுக்கு லக்ஷியார்த்தமாய் பொருள் விளங்கும். காரியகுருககளை அனுசரித்து விஷயாதிகளை மேன்மேலும் அனுஷ்டித்துவருபவருக்கு விஷயானந்தம்விட்டகலாமையால் அவாளுக்கு பயன்படாதெனை எடுத்து காட்டும்பொருட்டு, "ஸ்ரீகரமபுகளன்று" எழுதினர். (வேமனானந்த சுவாமிகள்) பக்தியோக ஞானங்களை அனுஷ்டித்தவர்.

பக்தியென்றால், (சிரவணம்செய்தல், கருதல், பாதசேர்வை, வந்தனம்செய்தல், அர்ச்சித்தல், பணிவிடை.செய்தல், கூடுதல், ஆத்துமனிவேதனம்செய்தல்) என ஒன்பதுவிதம்.

[யோகமென்றால், ஸ்லோகம்]

" மந்த்ரோ லயோ அடோ இராஜ
யோகச்சேதி சதுர்வித:"

(பொருள்.) மந்திரயோகம்,லயயோகம்,ஹடயோகம், இராஜ யோகம்என நான்குயோகங்களும் ஜீவன்முத்திக்குசாதனங்கள் மந்திரயோகத்தையே பக்தியோகமென்றும் சொல்லுவார்கள்.

(ஸ்லோகம்.)

ஏகாக்ஷரம் த்வ்யக்ஷரம்வா ஷடக்ஷர மதாபிதா
அஷ்டாக்ஷரம்வா மந்த்ராய மந்த்ரயோகீ ஸதாஜபேத்.

(பொருள்.) ஏகாக்ஷரம், த்வ்யாக்ஷரம், ஷடாக்ஷரம், அஷ்டாக்ஷரம் என மந்திரங்கள் நானகுவிதம.

ஏகாக்ஷரமென்றால் "சுருதி" (ஓமித்யேகாக்ஷரம்.பிரம்ஹ ஓமிதிபிரம்ஹ,) என்கிற பிரணவமந்திரத்தை இடைவிடாமல் ஜெபித்தல்.

த்வ்யக்ஷரமென்றால் அஜபமந்திரம், அஜபமென்றால் ஜெபம்பண்ணாமலேதினமும் இருபத்தோராயிரத்து அறுனூறுதகுதி உருவுஆகிக்கொண்டு இருக்குமாதலால்அந்தமந்திரத்தைஅஜபமென்றார்கள்.

(எப்படியெனில், ஸ்லோகம்.)

ஸகாரேண த்யாயதே ஜந்து ஹகாரேணஹி பவேத்ருவம்

(பொருள்.) ஸகாரரூபமான ஜீவன் ஹகாரரூபமான பரமேஸ்வரனைக்கலந்து தியானித்தால் ஹகாரரூபத்தை அடைவான் என்றால் பிரம்மைக்கியமாவான்.

ஷடாக்ஷரியென்றால் பிரணவத்துடன்கூடின சிவபஞ்சாக்ஷரியாகும்.

அஷ்டாக்ஷரி யென்றால் ஸ்ரீவிஷ்ணுவின் அனந்த நாமங்களில் சாராம்சமான நாராயணமந்திரம்.

{ லயயோகமென்றால் - இரண்டுபாகம். (ஸ்லோகம்.) }

மனேக்ரேவ சதேபிந்து: பிராணக்ரேவ சதேகளா
உபயோ ரிஸீயதேநாதம் லயஇத்தியுச்சதேபுதை
அனுஹதஸ்யசப்தஸ்ய தஸ்யசப்தஸ்யயோத்துவனி
த்வனிஅந்தர்கதம்ஜோதி ஜோதிஅந்தர்கதம்மன
தன்மனோவிலயம்யாதி தத்விஷ்ணே பரமம்பதம்.

(பொருள்.) அனாகதசக்கிரத்தின் பத்துவிதமான பிரணவநாதங்களைக்கேட்டு, பத்தாவது நாதம் யெவ்விடம் லயிக்கிறதோ அவ்விடத்தில், பிராணக்கிரஸ்திதமான சித்களாதரிசனத்துடன் சேர்ந்து அந்தஜோதி தரிசனத்தில் மனதை லயிக்கிறதையே லயயோகமென்பார்கள் இந்தலயயோகத்தை "மிருடானிகி மிருடனென்னும்யோகீஸ்வரர்" லக்ஷிதங்களாய் புகட்டி இருக்கிறார்.

ஹடயோகமென்றால் (யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தியானம், தாரணம்,சமாதி) என எட்டு பிரிவுகளடங்கியது.

இராஜ யோகமென்றால் (தாரகம், சாங்கியம், அமனஸ்கம், என்ற திரிவிதயோகங்க ளடங்கியது.) இந்த இராஜயோகத்தையே, பரிபூரணஅகண்டானந்த நிஷ்டையெனபார்கள்.

(வேமனனந்த சுவாமிகள்மேல்கூறிய) நான்குவித தர்மங்களையும், அனுசரித்த மகானுபாவராதலால் சுயம்பிரகாசமானஅறிவு, மாய்கையாகிய பிரகிருதிசுரூபத்துக்குசொன்னதாக தானே வெளியிடுகிறார். நாமரூபகிரிகைகள் பிரகிருதிக்கல்லது அறிவுக்கில்லை. 1

சிவகவுலகு நவகவுலகு
சிவபக்திகி தத்துவமுனகு சிந்தாமணிகின்
சிவலோக பிரமதுலகுனு
சிவுனகு குருவுனகு சரணுசேயரவேமா.

(பொருள்.) ஆத்மானந்த சுரூபத்தையே பாராட்டும் குரவர்களுக்கும், மாய்கையாகியபிரபஞ்சவாழ்வைவொழித்து நிஷ்களங்கமாயுள்ள பிரமத்தையே மனனம்செய்யும் ஞானிகளுக்கும்,ஆத்மானந்த சிரதைக்கும், யதார்த்த நிலமைக்கும், மோக்ஷக்கியானத்துக்கும், பிரமானந்த மென்னும் நித்திய வாழ்வை கைப்பற்றின மகானுபாவாளுக்கும் அகண்டபரிபூரண சச்சிதானந்த சுயம்பிரகாசமான பரமாத்ம சுரூபத்துக்கும் மேலானநிலையை சுருதியுக்தி அநுபோகத்தால் புகட்டி காட்டும் ஆசாரியருக்கும் திரிகரண சுத்தியாய்வந்தனம் செய்கிறேன் என்றவாறு.

(சிவகவுலகு) என்றுசொல்வதினல், சிலர், சிவனுடைய அடியார்களுக்கு என்றுபொருள் சொல்லுவார்கள், சிவன்என்னும் பதத்திற்கு, மங்களகரம்அல்லது, பரமானந்த சுரூபத்தில் லயித்து இருப்பவன் என்றுஉணர்க. 2

வேமனயனுயோகி வெலஸே லோகமுலோன
பூஜலிடுடு புண்ணிய புருஷுலாற
பூஜலிடினயந்த புக்திமுக்துல னிச்சு
விஸ்வதாபிராம வினுர வேமா.

(பொருள்.)இவ்வுலகத்தில் வேமன்னஎன்னும் யோகீஸ்வரர் எல்லோருக்கும் தெரியும்படியாக தன் சுவானுபவத்தின் இரகசியார்த்தங்களெல்லாம் அறிக்கையிட்டு, தானும் அவ்வண்ணமே முதல் மாய்கையைகைப்பற்றி அதின்விஷயாதிகளை தாமரையைப்போல் பற்றுதலில்லாமல் அனுபவித்து, அதின்துஷ்கர்மங்களை தெரியக்காட்டி, அதனைஒழித்து, யோகாப்பியாசங்களை அநுசரித்து, அதினலபிக்கும் அணிமாதி சித்துக்களின் குறியை வெளியாக்கி, நிஷ்களங்கசமாதியின் தோற்றத்தையும், கருதல்மாத்திரத்தில் உண்டாகும் சித்து பிரபாவங்களையும் காண்பித்திருக்கிறார். ஆதலால், ஓ அறிஞரே! அவரை பரமைசதன்னிய சுரூபமாக, மனேபூசைசெய்யுங்கள். அங்ஙனம மனேபூசைசெய்வீராகில், இகபரசௌக்கியங்களை அளித்துவுங்களை சீவன்முத்தராக்குவார், என்றவாறு.

(விஸ்வதாபிராம வினுரவேமா) என்னும் சரணத்துக்கு உலகத்தை இரக்ஷிக்கிறபரமாத்மாவுக்கு மனேகரனை ஓ வே

மன்னகேழ்ப்பாயாக என்று சிலரும்; உலகத்தை சிருஷ்டித்த சர்வவியாபகமான ஓஇருமா கேள்வேமா, என்று மற்றசிலரும் பொருள் செய்கிறார்கள். இரண்டு உரைகளேயும் யோசிக்கையில் ஒன்றும் வித்தியாசப்படவில்லை, எப்படியெனில் இவர் பிரமக்கியானி ஆனதால் (ஆக்கல் இரக்ஷித்தல்அழித்தல்) என்ற முக்குணங்களும் பரமாத்துமசுரூபத்தின் தொழிலாதலால் இவரிடத்திலும் உண்டென எல்லோருக்குந் தெரியும்பொருட்டு (விஸ்வதாபிராம) எனவாக்களிக்கப்பட்டது. (விணுரவேமா) என்பதினுல் நாமரூபகிரிகைகள் பிரகுருதி சம்பந்தத்தைப்பற்றி தோன்றினதினுல், அந்தபிரகுருதிதன்னை அறிவில்லோனைய்செய்யும் யென்றபயத்தால், அப்போதுக் கப்போது பிரகுருதியாகியமனத்துக்கு அறிவாகிய ஆத்துமாஅறிவைவிளக்கிக் கொண்டுவந்தாப்போல் சொல்லுகிறார். 3

ஆத்துமசுத்திலேனி ஆசாரமதியேல
பாண்டசுத்திலேனி பாகமேல
சித்தசுத்திலேனி சிவபூஜ யேலரா
விஸ்வதாபிராம விணுரவேமா.

(பொருள்.) ஆத்துமா அனாத்துமா என பகுத்தறியாமல் இந்த ஜடலத்தை நீரால்சுத்திசெய்து மதசம்பந்தத்தால் தனக்கில்லாத ஆசாரங்களை ஆசரிக்கிறதினுல் தனக்குண்டாகும்பயனியாது? விஷயானந்தம் மேலிடு மல்லது அகலுமா; பாண்டத்தை உள்புறமாக சுத்திசெய்யாமல் மேல்புறத்தில் மாத்திரம் கழுவி சமயல் செய்தால் அந்த உணவு ருசிப் படுமா? ஒருகாலமும் ருசிபடாது. சித்தசுத்தி அதாவது சித்தத்தில் கருதாமல் அதின்போக்கைப்போல போகவிட்டு ஈஸ்வரன் பூசை பகிரங்கமாக செய்வதினுல் அடையும்பயனியாது? உலகத்தாரால்புகழ்அல்லது பேரானந்தம்கிடைக்குமா? ஆதலால் எப்படி பாண்டத்தை உள்புறமாக சுத்திசெய்யாமல் சமைக்கும்பதார்த்தங்கள் ருசிப்படாதோ அவ்வண்ணம்உள்சுத்தியில்லாத ஆசாரங்கள் அனாசாரங்களுக்கொற்றவை; மனதாலசெய்யாதபூசை செய்தும் பலனில்லாததுக்கொற்றவை என்றவாறு.

"ஆத்துமசுத்தியுள்ளோருக்கு ஆசாரங்கள்வேண்டுவதில்லை. மனோபூசைசெய்பவர்களுக்கு பகிர் பூசையால் பிரயோசனமில்லை. 4

கல்லகுருடு கட்டு னெல்ல கர்மம்புலு
மத்தியகுருடு கட்டு மந்திரசயமு
உத்தமுண்டு கட்டு யோகஸாம்பிராஜ்ஜியம்பு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) மூன்றுவிதமான ஆசாரியர்உலகத்தில் உண்டென்றுகாண்பிக்கிறார். மதாசாரியர் தனக்கில்லாத அனுஷ்டானங்களெல்லாம் தான் அனுசரிக்கவேணடுமென்று கட்டளையிட்டு பலகருமங்களை செய்துதான் தீரவேண்டுமென்றும்; அப்படி செய்வதினால் இந்திரலோகம் பிரமலோகம் முதலானதும் தேகானந்தரம் தனக்குப் பிராப்தியாகுமென்று சொல்லி வேண்டியபொருளை அபகரித்துக்கொண்டு தான்கெட்டதுமல்லாமல் தன்னைஅனுசரித்தவர்களையும் கெடுத்துக்கொண்டு தான் அவர்களால் பூசிக்கப்பட்டு வருவார்கள். அப்பேர்ப்பட்ட ஆசான்களை வேஷதாரிகளென்று சொல்லவேண்டும்.

சிலஆசாரியர்கள் மந்திரயோகத்தைமாத்திரம் காமியார்த்தமாக உபதேசித்து அதினால்பரம்கிடைக்குமென்று போதித்துவருவார்கள் அவர்களை மத்தியஆசாரியர்களென்று சொல்லவேண்டும்.

காரணாசாரியர் இந்தபிரகிருதி மாயாசுரூபமென்று இதினால்செய்யும் கருமங்கள் ஒன்றுந் தனக்குப் பயன்படாதென்றும் ஆத்துமஜீவைக்கியசந்தானம் சாதித்தல் வேண்டுமென்றும் உபதேசித்துவருவார். இந்த நற்போதகனை ஞானாசாரியனென்று சொல்லுவார்கள் என்றவாறு. 5

நிக்கமைன மஞ்சி நீலமொக்கடெ சாலு
தளுகுபெளுகுராள்ளு தட்டெடேல
சதுவுபத்திய மறய ஜாலதா யொகடைன
விஸ்வதாபிராம வினுர வேமா.

(பொருள்.) மோசமான உதவாதகல்கள் ஒருகூடையில் அதிகமாய் வைத்திருக்கிறதைவிட விலையுயர்ந்த நீலமணி ஒன்றிருந்தால் போதும். அப்படியே பலவிதசாஸ்திரங்களை வாசித்து பலவிதகிரிகைகளை செய்கிறதைவிட அறிவைவிளக்கும் ஒருவிருத்தம் வாசித்து அதின்கருத்தையறிந்து அதைப்போல்நடந்துகொண்டால்போதும் என்றவாறு. 6

உப்புகப்புரம்பு ஜெக்கபோலிக யுண்டு
ஜடைகூட ருசுலஜாட வேறு
புருஷுலந்து புண்ணியபுருஷுலு வேறயா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) உப்பும் கர்ப்பூரமும் பார்வைக்குஒன்றாய்த்தோற்றப்பட்டாலும் அதின் மணத்திலும் ருசியிலும் வேற்றுமைப்படுகிறது. அங்கனம் மனிதர்எல்லோரும் ரூபத்தில் ஒன்றாய் தோன்றப்பட்டாலும் குணாதிசயங்களில் அறிஞர் அறிவிலார் வேற்றுமைப்படுவார்கள், என்றவாறு. 7

ஆடுவாரி கன்ன நரத்நம்பு பொடகன்ன
சாரமைனருசுல செவுலகன்ன
அய்யகாண்டலகைன நாசலு புட்டவா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) மங்கையரைத் தரிசித்தாலும் தனத்தைப் பார்த்தாலும் மதுரமான உணவின் ருசியைக்காதால் கேட்டாலும் மாய்கையை அறுத்து யமநியமாதி சாதனங்களைக் கைக்கொண்டு சாதாசமாதி நிஷ்டையிலுள்ள யோகீஸ்வரர்களானாலும் மனம் தளருவார்களென்றால்; கேவலம் இராகாதிவிஷயானந்தமே சாதனமாய்கொண்ட மனிதர்கள் வேண்டுவதற்கு யேதாவதுதடங்கலுண்டோ என்றவாறு. 8

தாமசின்சி சேய தகசெட்டிகாரியம்பு
வேகரிம்ப நதியு விஷமெயகு.னு
பச்சிகாய தெச்சி படவேய பலமவுனெ
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) ஒருவிருக்ஷத்தின் பூங்கனியையெடுத்து பழுக்க வைத்தால் பழமாகாமல் உலர்ந்துப்போகும் அல்லது; பழுக்கட்டுமென்று செடியில்தானேவைத்து திரபழுத்தபிறகு அறுக்கலாமென்றிருந்தால், அதைப்பக்ஷிகள் முதலான ஜந்துக்கள்தின்றுவிடும். ஆனதால் செம்பழமா யிருக்கும்பொழுது அறுத்து பழுக்கப்போட்டால், நமக்குபுசிக்க பழமாகும். அவ்வண்ணம் எந்தகாரியத்தையாகிலும் தாமதித்துசெய்தால் பிரயோஜனமில்லாமல் போகும். யோசிக்காமல் சீக்கிரம்முடிக்க புகல்

வோமானுல், நமக்குஏதாவது கெடுதிநேரிடும் ஆதலால் எந்த காரியத்தையும் யோசித்து செய்கிறது நலம் என்றவாறு. 9

நீடிலோன நோட நிகடிதின்னகப்பிராகு
பைட மூரடைன ப்பிராகலேது
நெலவுதப்புசோட நேர்பரிகொறகாடு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) சலத்தில் ஓடும்ஓடம்காற்றில்லாமல்போனபோதிலும்மெல்லமெல்ல நகரும் அந்தஓடம் நிலத்தில். சுழல் காற்றுஅடித்தாலும்ஒருஅடியாவதுநகருது. அப்படியேமனிதரும் எவ்வளவு சாமார்த்தியராய் இருந்தாலும் இடம் தப்பும்பொழுது அவர்களது சாமர்த்திய மொன்றும் பயன்படா தென்றவாறு. 10

பந்தி பில்லலீனு பதியுனேதின்டினி
குஞ்சரம்புலீனு கொதுமனேகடி
உத்தமபுருஷுண்டு ஒக்கடேசாலடா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) வராகம் தடவைக்குப் பதினைந்து குட்டிகளைப் போடும். யானை தடவைக்கு ஒரு குட்டியை மாத்திரம் போடும். பன்றின் குட்டிகள் அதிகரித்து இருந்தாலும் பிரயோஜனமில்லாமல் இருக்கிறதுகள். யானையின்குட்டி ஒன்றிருந்தாலும் யெவ்வளவுபிரயோசன முள்ளதாயிருக்கிறது. அதுபோல் துன்மார்க்கர் நூறுபேரைபெற்று குலத்தின்பேரை நாசப்படுத்துவதைவிட அறிவுள்ள பிள்ளை ஒருவனே போதுமென்றவாறு. 11

எருகுவானி தெலுப நெவ்வடைனனு சாலு
நொருல வசமுகாது நோகு தெலுப
ஏடிவங்க தீர்ப்ப நெவ்வரிவசமயா
விஸ்வதாபிராம வினுர வேமா.

(பொருள்.) அறிவுடையோனுக்கு ஏதாவது தெரியச்சொல்வதில் பிரயாசை ஒன்றும் இல்லை ஆனல் ஆற்றின்வாட்டசாட்டங்களை சரிபடுத்த யாருக்கு எப்படி அசாத்தியமாய் இருக்கிறதோ அவ்வண்ணம் அறிவில்லாருக்கு தெரியச் சொல்வது மிகவும் அசாத்தியம் என்றவாறு. 12

அல்புடெபுபெல்கு நாடம்பரமுகானு
சஜ்ஜனுண்டு பல்கு ஜல்லகானு
கம்சும்ரோகினட்லு கனகம்பு ம்ரோகுனா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) அறிவில்லோன் எந்த காரியங்களையும் தான்செய்து முடிப்பவன்போல் டம்பமாய்பேசுவான். அறிஞன் எந்த விஷயத்தையும் மிருதுவாய் பேசுவான். வெங்கலம சப்திக்கிறதுபோல் அதிகவிலையுள்ளபொன் சப்திக்குமா? என்றவாறு. 13

கங்க பாறுசுண்டு கதலனி கதிதோட
முரிகிகால்வ பாரு ம்ரோததோட
சாத யோர்ச்சினட்லு அதமுடோர்வகலேடு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) பெரிய ஆறுகளானது ஓசையொன்றும் இல்லாமற் படிக்கு பிரவகித்துக்கொண்டு இருக்கும். சிரிய கால்வாய்கள் வெள்ளம்புரண்டு மிகுந்த வோசையுடன் ஓடும். அங்ஙனம் தாத்துருத்துவமுள்ளவர்கள் யெதைசொன்னபோதிலும் பொறுத்துக்கொள்வார்கள். நீச்சர்களோ வீணில்தானே கோபம் செய்துக்கொள்வார்கள் என்றவாறு. 14

லோபிவானிஜம்ப லோகம்புலோபல
மந்துவலது வேறெ மதமு கலது
பைகமடுக சால பக்குன படிசச்சு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) லோபியானவனைக்கொல்ல வேறு யாதொருமருந்துத்தேவையில்லை. வேறுவிதமான மார்க்கம் ஒன்று இருக்கிறது. அதாவது அவனிடத்திற்கேகி தனக்குபணம் மிகுதியாய் வேண்டுமென்று கேட்டமாத்திரத்தில், அவன் இறப்பானல்லது ஒருகாசுங்கூட குடுக்கமாட்டான் ஆதலால் லோபியைக் கொல்லவேண்டுமென்றால் பணம் கேழ்க்கிறதே திவ்வியமான ஔஷதம் என்றவாறு. 15

அக்கியானமெ சூத்திரத்துவமு
ஸக்கியானமெ பிரம்மமனுட ஸ்ருதுலனுவினுரா
யக்கியான முடிகி வீஸ்மிகி
ஸக்கியானபுபிரம்மமொந்தே ஜடைரவேமா.

(பொருள்.) தன் அறிவறியாமையே மூடத்தனம் என்பார்கள். சூத்திரன் என்ற பதத்திற்கு பாமரன் என்று அருத்தம். இதையாரும் கருதாமல் ஜாதிபேதங்களை வகித்துக்கொண்டு பிராமண ஜாதியாரல்லது மற்றவர்களுக்கு யோகானுஷ்டான ஜபதபங்கள்கிடையாதென்று பிரளிசெய்கிறார்கள். அந்தத்திருட்டுத்தனத்தை எல்லாருக்கும்தெரியும்படிக்குவெளியிடுகிறார்.

எந்தமனிதனுக்காகிலும் அஞ்ஞானம் இருக்கிறவரைக்கும் அவனை சூத்திரனென அழைக்கலாம். பிரம்மக்கியானம்வாய்த்தால் சூத்திரன் எனப்படாமல் பிரமக்கியானி எனப்படுவான். எப்படியெனில், வனவேடருகிய வால்மீகர்யென்பவர் தனகரு அறிவில்லாமை அகன்று, ஞானம் உதயமானதால், பிரம்மரிஷிஎனபேர்வகித்து யாவராலும் தோத்தரிக்கப்படுகிறார். ஆதலால்,எந்தகுலத்தானுகிலும்ஜீவைக்கியசந்தானத்தைக்கொள்ளுவானுகில் அவன்பிரம்மக்கியானிஎனப்படுவதற்கு சந்தேகமில்லை. பெரியகுலத்தானுகிலும் பிரம்மக்யானமில்லாவிட்டால் அவனை சூத்திரன்என்பதற்குதடையொன்றுமிராது-எ-று. 16

பொந்தி யெவரிஸொம்மு போஷிம்ப பலுமாறு
பிராண மெவரிஸொம்மு பக்திசேய
தனமு யெவரிஸொம்மு தர்மமே நனஸொம்மு
விஶ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) இந்ததேகம் யாருடையதென்று அன்னபானுதிகளால் போஷிக்கிறது? பிராணன் யாருடையதென்று நாம் அதிஞல் பக்தியை அனுஷ்டிக்க? பணம் யாருடையதென்று நாம் சேர்த்துவைக்க? "ஏனென்றுல்" எத்தனை ஜன்மங்கள் பிராரப்தத்தால் வாய்ச்சதோ? எத்தனை ஜன்மங்களில் நாம் பக்தி அனுஷ்டித்துவந்தோமோ? பணத்தை நாம் பிறக்கும் பொழுது ஏதாவது எடுத்துக்கொண்டு வந்தோமா? அல்லது மரிக்கும்பொழுது யெதாவது நம்முடன்கூட எடுத்துக்கொண்டுபோகிறேமா? இல்லை. நாம் போகும்பொழுது அதைஅவ்விடத்தில்தானே விட்டுவிட்டு நாம்செய்த நல்வினை தீவினையைமாத்திரம் நம்முடன்கூடகொண்டுபோகிறேம். ஆதலால் நாம்ஜீவித்திருக்கையில் நம்மால் இயன்றவரையில் தர்மம்செய்து நல்வினையை சம்பாதித்துக்கொள்ளவேண்டும்-எ-று. 17

வெர்ரிவானிகைன வேஷதாரிகினேன
ரோகிகைன பரமயோகிகைன
ஸ்திரீலக்ஷுனபுடு சித்தம்பு ரஞ்சில்லு
விஸ்வதாபிராமவினுரவேமா.

(பொருள்.) பைத்தியக்காரனானாலும், வேஷதாரியானாலும், வியாதியுடையவனானாலும், ஜீவைக்கிய சந்தானபரனானாலும், மங்கையரை பார்த்தமாத்திரத்தில்தானே மனது விகல்ப மாகாமல்போகா தென்றவாறு. 18

சித்தஸுத்திகலிகி சேஸின்புண்ணியம்பு
கொஞ்சமைன நதியு கொதுவகாதுன்
வித்தனம்பு மர்ரிவிருக்ஷம்புனகு னென்த
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) ஆலம்விதை சிரியதாய்இருந்தாலும், விருக்ஷம் எப்படி பிரமாண்டமாய்அளாவிஇருக்கிறதோ அங்கனம் சித்தசுத்தியோடு செய்த புண்ணியம் கொஞ்சமாய் இருந்தாலும் நற்பயன் விஸ்தாரமாய் பரவச்செய்யும் என்றவாறு. 19

இராஜவருலகெபுடு ரணரங்கமுல சிந்த
பரமமுனுலகெல்ல பரமு சிந்த
யல்பநருல கெல்ல நதிவலைபசிந்த
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) அரசர்களுக்கு யுத்தத்தின்பேரில்சிந்தை. பரமமுனீஸ்வரர்களுக்கு பரத்தின்பேரில் சிந்தை. அறிவில்லாதவர்களுக்கு ஆடவர்கள்பேரில்தானே சதாகாலமும் சிந்தைஉளது என்றவாறு. 20

தல்லி தன்றிமீத தயலேனி புத்துருண்டு
புட்டனேமி வாடு கிட்டனேமி
புட்டலோனி செதுலு புட்டதா கிட்டதா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) புற்றில் செல்லுபிறந்தாலும் என்ன பிரயோஜனம், இறந்தாலும் நமக்கென்ன நஷ்டம். அவ்வண்ணம் தாய் தந்தையரிடத்தில் பிரீதியில்லாத குமாரன் இறந்தென்ன அல்லது அவன்வாழ்ந் தென்னபிரயோஜனம்? ஏனென்றால்நாம்

தகப்பனுரின்விந்துவால் தாயார்வயிற்றில். பத்துமாதம்வரையி விருந்து அவயவங்களெல்லாம் விருத்தியாகி நம்மால் அநேக சங்கடங்களையடைந்தும் பாராட்டாமல் நம்மைப்பெற்று பேசச்சக்தியற்று இருக்கும்பொழுது நமக்கு வேண்டிய உபசாரங்கள்செய்து நம்மை வளர்த்துவந்த தாய்தந்தைய ரிடத்தில் அன்பு இல்லாமற்போனல் அப்பேர்க்கொற்ற குமாரன் இருந்தென்ன அல்லது இறந்தென்ன என்றவாறு. 21

ஸத்ய மமரியுண்ட ஞான மமரியுண்டு
ஞான மமரியுண்ட ஸத்யமுண்டு
ஞானஸத்யமுலனு ஸமமைன த்விஜுடகு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள.) சத்தியமான நெறி எவ்விடத்தில் உளதோ அவ்விடத்தில் அறிவும் ஆட்கொண்டிருக்கும். எவ்விடத்தில் அறிவு இருக்குமோ அவ்விடத்தில் சத்தியங்கூட நிலைகொண்டிருக்கும். சத்தியமும்அறிவும் யாரிடத்தில் சமமாயிருக்குமோ அவனைத்தான் (திவிஜன்-இரட்டைப்பிறப்புடையோன், பிராமணன்) எனபார்கள்.

(ஏனெனில், ஸ்லோகம்.)

(சத்தியம்மாதா பிதாஞானம்,) என நீதிசாஸ்திரம்,அதாவது, யதார்த்தமானது தாயாரைப்போலவும், ஞானமானது தகப்பனைப்போலவும், என்று சொல்லியிருக்கிறது. பொய்பேசாமல்யிருப்பவன் அறிவுடையோனவான், பொய்யன் ஒருகாலமும் அறிஞன ஆகமாட்டான் எனறவாறு. 2}

தான மொஸகு சன்ன தியானம்பு மரிஹெச்சு
தியான மொஸகுகன்ன தெலிவி ஹெச்சு
தெலிவிகன்ன நாசதெகவேசினதி ஹெச்சு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) அடியார்களுக்கும் பேதைகளுக்குந் தங்களால் இயன்றவரைக்கும் கனகாதிவஸ்துக்களைத் தானம்செய்கிறதினல் வாய்க்கும்பயனைவிட பரமேசனைதியானம்செய்கிறது மிக நன்மை தியானம்செய்து அடையும்,நற்பயனைவிட அறிவுடையோன்ஆகிறது மிகவும்நல்லது. அப்படிஅறிவுடையோன் ஆகி

றதைவிட ஈஷணாதியாசங்களை அறுத்து பற்றுதலில்லாம லிரு
ப்பது மிகவும்மேன்மையானதாயிருக்கிறது. என்றவாறு. 23

காலிலேனி திபகளிக சந்தம்புன
நலஹு ஸஉள்ளுமேலனி ஜலதிரீதி
நிச்சலாத்ம யென்ன நிர்விகாரம்புன
நுண்டெனேனி முக்தி யன்றுவேமா.

(பொருள்.) காற்றுஇல்லாத தலத்திலிருக்குந்திபம் எங்கன
ம் அசையாமல் இருக்குமோ, அலைகள் இல்லாதஇடத்தில் ச
முத்திரஜலம் அசையாமல் யெப்படி இருக்குமோ, அங்ஙனம்,
சுகதுக்கத்துக்கு சலிக்காமல் பற்றுதலில்லாமல், நிர்விகாரயா
யிருப்பானாகில் அந்த சத்புருஷனை சீவன்முக்தனென்று அறி
ஞர்சொல்லுவார்கள் என்றவாறு. 24

மண்டலோஹமுலனு மானுசிலலயந்து
படமுகோடலந்து பரக நிஸஉச
ஜெட்லநண்டநட்ல ஜெலகு தேஹமுஜீவி
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) எங்கனம் தீயின்அனல் இரும்புமுதலான லோ
கங்களை காச்சும்பொழுது இரண்டுங்கலந்து இருந்தாப்போல்
தோன்றுகிறதோ? இரும்புஆணியானது மரத்தில்தைத்து பா
ர்வைக்கு இரண்டும்சேர்ந்திருப்பதுபோல் தோன்றுகிறதோ?
சுவரில் பதுமையெழுதி பார்வைக்கு அதில் சேர்ந்திருப்பது
போல் காணுகிறதோ? விருக்ஷம் மணலில்உண்டாகி மணலும்
விருக்ஷமும் கலந்திருந்தாப்போல் தோன்றுகிறதோ? அவை
கள் விசாரணையில் அப்படி ஒன்றோடொன்று சம்பந்தமில்
லாமல்யிருக்கிறதோ? அப்படி ஆத்துமாவானது தோன்றல்மா
த்திரம் ஜடலத்துடன் கலந்திருந்தாப்போல் காட்டி கருமாதி
விஷயங்களுக்கு தான் உடன்படாமல் சாட்சிபூதமா யிருக்கி
றது. என்றவாறு. 25

அனகனனக இராக மதிஸயில்லு சனுண்டு
தினகதினகவேமு தீபுனுண்டு
சாதகமுனபனுலு ஸமகூரு தரலோன
விஸ்வதாபிராம வினுர வேமா.

(பொருள்.) பாட பாட பழக்கத்தால் இராகம் மிகவும் ரம்மியமாயிருக்கும். மிகவும் கசப்பான வேப்பன் கூட புசிக்க புசிக்க பழக்கத்தால் மதுரமாகும். ஆனதால் இவ்வுலகத்தில் அப்பியாசத்தால் யெந்த காரியமும் சாதனமாகின்றது. ஆதலால் அப்பியாசத்தால் சாதிக்காத ஒருவிஷயமும் இவ்வுலகத்தில் இல்லை என்றவாறு. 26

அடவிதிருக லேது யாகஸமுன லேது
யவனி தீர்த்த யாத்திரலந்து லேது
யொடலுசுத்திஜேசி யொடயுனிகுடரா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) காட்டில்லுண்டியாய் உணவுவிட்டு வாயுபக்ஷணம்செய்துக்கொண்டுதிரிகிறதினுல் மோக்ஷம் அகப்படப்போகிறதில்லை. அல்லது ஆகாயத்தில் இருக்கிறதென்று யாகாதிகருமங்கள் செய்கிறதினுலும் அந்தப் பேரானந்தத்தைக் காணப்போகிறதில்லை. அல்லது கங்கை, யமுனை, சரஸ்வதி, மகாநதி, கிருஷ்ணை, காவேரி, கோதாவரி என்றநதிகளில் ஸ்நானம்செய்துதேகசுத்திசெய்ய கருதி யாத்திரைசெய்கிறதினுலும் ஒருபிரயோஜனமுமில்லை. தாரகத்தைக்கைக்கொண்டு சாங்கியவிசாரத்தில் தேகதத்துவங்களை பரிசோதித்து ஆத்துமா, அனுத்துமா எனபகுத்தறிந்து அமனஸ்கபாவத்தில் அத்வைதனுன பரம சைதன்னியமூர்த்தியை கண்டாலொழிய பேரானந்தம் வாய்க்காது என்றவாறு. 27

கடுபுனிண்ட ஸுதனு கிரமமுதோ த்ருவின
பாலமீதனேல பாரு மனமு
தத்வமெறுகுவெனுக தத்வம்புலேடிகோ
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) எப்படி வயிறுநிரம்ப வெண்ணெயை புசிக்கிறவனுக்கு பாலால் ஒருபிரயோசனம் இல்லையோ அப்படியே சாங்கியத்தால் நிச்சயத்தை தெரிந்து அதனிடத்திலேயே லயித்திருப்பவனுக்கு சாஸ்திர விசாரணையால் என்னபிரயோஜனமிருக்கிறது? என்றவாறு. 28

உத்தமோத்தமுண்டு தத்துவக்ஞுடலமீத
மஹிமகுபுவாடு மத்தியமுண்டு

வேஷதாரி யுதரபோஷகுண் டதமுண்டு
விஸ்வதாபிராம வினுர வேமா.

(பொருள்.) தத்துவ ஆருட்சிசெய்து பரமசைதன்னியனை தரிசித்துக்கொண்டு வெளிக்கு காட்டாமலிருப்பவன் மகா உத்தமன்.

தன்னுடைய மகிமையைக்காட்டி உலகத்திற்றன்னை மதிக்கும்படியாக செய்கிறவன் மத்திமன்.

தன்னிடத்தில் யதார்த்தநிலை யில்லாமற் போனபோதிலும் வேஷத்தைத்தரித்து பிரஸியாக்கிக்கொண்டு வயிர்வளர்க்கத்திரிகிறவன் அதமன் எனப்படுவான் என்றவாறு. 29

ஹ்ருதயமந்து னுன்ன ஈஸ்வரனி தெலியக
சிலலகெல்ல முரொக்கு ஜீவுலாரு
சிலல னேமியுண்டு ஜீவுலந்தேகாக
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) இருதயத்தில் இருக்கிற பரமசைதன்னியனை சாதனையால் சோதித்துப் பாராமல் கல்களை நமஸ்கரிக்கிறதில் என்னபிரயோஜனம். ஓ பயித்தியக்காரரே! உங்களால் செய்யப்பட்டதென்றும், நிர்ஜீவியென்றும்அறியீர்களா? பரமசைதன்னியன் அந்தபதுமைகளில் இருப்பானு? ஒருகாலமும் இருக்கமாட்டான். உங்களிடத்திலிருக்கிறபரபிரம்மத்தை சோதித்துப் பார்க்கக்கூடாதா? அதில் உங்களுக்கு பேரானந்தம் அகப்படுமே. சிலைகளைவேண்டினுல் யென்னபயன் உங்களுக்குக் கிடைக்கும்? என்றவாறு. 30

கங்ககோவுபாலு கண்டெடைனனு சாலு
கடவெடன னேமி கரமுபாலு
பக்திகலுகுகூடு பட்டெடைனனுசாலு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) காரும்பசுவின்பால்ஒருகரண்டி அகப்பட்டபோதிலும் பானத்திற்கு யோக்கியமாயும் நாவுக்குருசியாயும் இருக்கும். கழுதையின்பால் ஒருமிடா அகப்பட்டாலும்யென்னபிரயோசனம். அதிகமாய்பானம்பண்ணினுலும் தேகத்திற்கு கெடுதி, நாவுக்குஇனிமையுமில்லை. அப்படியே மிகுந்த உபசாரத்

ரோடும் அனபோடும்இடும் அன்னம் ஒரு கவாளம் ஆனாலும் மிகவும்பிரீதி. அன்பில்லாமல் மூப்பழுத்துடன் அன்னமிட்டாலும் என்னபிரயோஜனம் என்றவாறு. 31

காகிகூடிலோன கோகிலமுன்னட்லு
பிரமரமகுசு புருகு பிரதிகினட்லு
குருனிகொலுசுவெனுக குருவுதா னவுனயா
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) வாயசத்தின் கூண்டில் குயில் வளர்ந்தாப்போலும்; குழவியிடத்தில் நாதத்தால் ஒருபுழு தன்சுரூபத்தைவிட்டு அதின்ரூபத்தைக்கொண்டு ஜீவித்தாப்போலும்; குரியாகிய பரமாத்துமாவை சாதனத்தால் மனனம்செய்து க்ரூராதி ஆசாபாசங்களை ஒழித்து துருக்கு துருச்சியத்தால் யதார்த்தத்தைதெரிந்து நிஷ்டையால் தானும் அகண்டாபாவத்தை அடைந்து அத்துவைதனாய் பரமாத்துமாசுரூபனாவான்·எ-று.32

மாட திர்தவச்சு மதிநெக்குலேகுண்ட
திந்தவச்சு ருயி தின்னகானு
மனசுதிந்தராது மஹிநென்தவாரிகி
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) சித்தத்தி லியாதொன்றுஞ்சந்தாபமில்லாமலிருக்கும்படிக்கு வார்த்தைகளைதிருத்தலாம். கரடுமுரடாய் இருக்கிறகருங்கல்லையும் நாளுக்குநாள் கருவிகளால்சுத்தமாக்கலாம். ஆனால் உலகத்தை பற்றுதலாககொண்டிருப்பவரின் மனதை விசாரணையால் மெய்நெறியைக்காட்ட மிகவும்பிரயாசை, என்றவாறு. 33

மனஸாநந்து முக்தி மலயுசுனுண்டங்க
மனஸாநெறுகலேக மனுஜாலெல்ல
மனஸானண்டடலேக மாயமைபோதுரு
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) மனதுனிடமாகத்தானே முத்தி கலந்திருக்கஅந்தமுத்திமார்க்கமாக செல்லாமல் சஞ்சலம் மனதென்று அறியாமல், மனிதர்களெல்லோரும் அந்தக்கரணங்களை விசாரியாமல், அதற்குள்ளாகி, விஷயாதிகளில் அகப்பட்டுக்கொண்டு

மாய்கையில் சிக்கி பலவித துன்பங்களுக்குஆளாகின்றார்கள் என்றவாறு. 34

மனஸு முக்தியனுசு மதினெறுங்ககலேறு
மனஸு சேத தகிலி மாயமைரி
மனஸு தானெயைன மர்மக்னுடகுயோகி
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) மனதே ஆராட்சியால் முத்திசுரூப மாகுமென்று அறியாமல் உலகத்திலுள்ள மானவர்கள் மனதின் கிரிகைகளுக்குஉட்பட்டுமோசமாகிறார்கள். ஆகையால் சாங்கியத்தால் மனதே தன்சுரூபமானால், சீவன் முத்தனானயோகீஸ்வரன் ஆவான். இதைவிட வேறுசாதனைகள் உலகத்தில் ஆத்துமசுரூபனுக்க கிடையாது என்றவாறு. 35

நின்னு ஜூசுசுண்ட னின்டினு தத்வம்பு
தன்னு ஜூசுசுண்ட தகுனு மாய
நின்னு னெறிகினபுடெ தன்னுதா னெறுகுனு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) ஓபரமாத்துமா! நாமரூபகிரியா ரகிதனான உன்னை சாங்கிய அமனஸ்கத்தால் நிஷ்டையில்காண்கிறவனைக்கும் அகண்டாபாவம் பரிபூரணமாயிருக்கிறது. பகிர்முகமாய் உலகத்தைநோக்குமிடத்தில் உலகமாய்கை வந்தடைகிறது, உலகமாய்கையில் இருகாதி விஷயானந்தம் விருத்தியாகிறது. ஆனதால் ஓ பரமசைதன்னியனே! உன்னை அறியும்பொழுதே இந்தமாயாதி பிரபஞ்சங்களெல்லாம் நீர்குமிழியெனவெறுத்து தன் மெய்சுரூபத்தை அறிகிறான் என்றவாறு. 36

காலி காலி கலசெ ககனம்பு ககனம்பு
மன்னு மன்னு கலசெ மண்ட்ட மண்ட்ட
நீரு நீட கலசெ நிர்மலம்பையுண்டெ
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) இந்ததேகமானது ஐந்து பூதங்களால் உண்டானது. அதாவது ஆகாயம், வாயு, அனிலம், சலம், பூமி, இந்த பஞ்சபூதத்தின் விகாரமாகிய இந்தசடலம், முன்போல, காற்றில் காற்றும், ஆகாயத்தில் ஆகாயமும், மண்ணில் மண்ணும்,

தீயில் தீயும், நீருடன் நீரும் கலந்துவிட்டு, நிர்மலமான ஆத்துமாவைமாத்திரம் புறம்பாக்கிவிடும். ஆனதால், இந்த பஞ்சபூத பௌதிகமானஉடலை சதமென்று நம்பாமல், விஷயா சக்தியை ஒட்டி, பரபிரம்மனைசேரும்படியான சாதனங்களை கைகொண்டு, (அயம் ஆத்துமாபிரம்ம) மெனும் வாக்கியத்திற்கு லக்ஷியார்த்தமாக பரப்பிரமானந்த போதையை பானம்பண்ணி ஆனந்தமயக்கம்கொண்டு, உலகத்தை பற்றுதலில்லாமல் தான் பரமாத்துமா சுரூபனென்று அறிந்து, சுகதுக்கங்கள் தேகத்தை சேர்ந்தவைகளென்று சந்தோஷமும் வியாகூலமும் அடையாமல், பரம சைதன்னியனாய், அகண்டாபாவனாய், பிரபஞ்சாதீதனாய், மாயாரகிதனாய் இருத்தல்நலம்-எ-று. 37

வெதுக வெதுக தொறுகு வேதான்ன வேத்யுண்டு
வெதுகுவானி தானு வெதுகுசுண்டு
வெதுக நேர்ச்சினட்டி வெரவர்லு கலரகோ
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) நாம் இத்தேகத்தில் வேதத்தில் சொல்லியிருக்கிற முடிவான பரபிரம்மம் தத்துவஆராட்சி செய்ய செய்ய அகப்படுகிறான். அந்தபிரமமும், யார்நம்மை குறித்து ஆராட்சிசெய்கின்றானோவென தானும் ஆராட்சி செய்துக்கொண்டிருக்கிறான். ஆகையால், இவ்வுலகத்தில் சிரவணமனனநிதிதியாசத்தால் தத்துவ ஆராட்சிசெய்யும்படியான பிரம்மஞானிகள் யிருக்கிறார்களா? என்றவாறு. 38

தனுவலசின தாவலசுனு
தனு வலவகயுன்ன தன்னு தா வலவடிலன்
தனது படாடோபம்புலு
தனமாயலு பனிகிராவு தரலோ வேமா.

(பொருள்.) தான், நாமரூபகிரிகைகள் இல்லாத அந்த மகானுபாவனை சாங்கியத்தால் ஆராட்சிசெய்து அமனஸ்கத்தால் சாதித்தால், தானும் (பரபிரம்மமும்) அந்தமெய்யோகனைதேடி அவனுடன்கலந்து அகண்டாகாரமாய் செய்வான். பிரகுருதி சம்பந்தமான மாய்கைக்குள்ளாகி பக்திவைராக்கிய ஞானாதிகளைகொள்ளாமல், பரபிரம்மத்தைதேடாதவனைதானும் அவனுக்குபயன்படாமல் தூரத்தில்தானே சாக்ஷிரூபமாயிருப்பான்.

ஆகையால் ஓ மானிடர்களே? உங்களுடைய மாயர்தி கிரிகைகளும், கபடோபாயங்களும், அவனைச்சேரும்படியான மார்க்கத்தைக்காட்டாததுகள் அதைச் சீக்கிரம்விட் டொழியுங்கள். தத்துவஆராட்சி செய்யுங்கள் என்றவாறு. 39

ஸ்வானுபூதி லேக, சாஸ்திர வாஸனாலசே
ஸம்சயம்பு செடது ஸாதகுனகு
ஜித்ரதீபமுனனு ஜீகடி ஜெடனட்லு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) சிலர்சாஸ்திரத் திறமையால்ஆத்மானுபவத்தை சாதித்தவர்கள்போல்அபினயித்து, தாங்கள்படித்தகல்வித்திறமையால் குறியைக்கண்டவர்கள்போல் பேசுவார்கள். அப்படி பேசினதால்அடையும்படியான பிரயோஜனம் கல்விமான்என்றல்லதுஞானிஆகமாட்டான் அப்படிசாஸ்திர விசாரணையால் பிரம்மஞானி ஆகவேண்டுமானல், படத்தில்எழுதியிருக்கிற சித்திரதீபத்தின் ஒளியால் அந்தகாரமானயிருட்டுநீங்கினுல், வாசித்தல்மாத்திரத்தில் பிரம்மஞானி எனப்படுவான்-என்று. 40

உர்விஜனுலு பரமயோகீஸ்வருனி கூடி
தெகடுவாரு கானி தெலியலேரு
அம்ருதமாதிருசுல ஹஸ்தமே மெருகுனு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) அமிர்தம் முதலான யின்ப பதார்த்தங்களை நாம் கைகளால் எடுத்தும், அந்தக் கைகள் எப்படி அதின் ருசியைஅறியமாட்டாததுகளோ? அங்கனம், இவ்வுலகத்திலுள்ள ஜனங்கள் சிரேஷ்டமான யோகீஸ்வரனை சேர்ந்தும் அவனை பக்திசுச்ருஷையால் திருப்திசெய்து ஞானநெறியை தெரிந்துக்கொள்ளாமல், அவரது குணுனுபவங்கள் இப்பேர்க்கொற்றது அப்பேர்க்கொற்றதென்று, வாய்க்குவந்தப்படிக்கு வைவார்கள் என்றவாறு. 41

மகனிகாலமந்து மகுவ கஷ்டின்சின
சுதுலகாலமந்து சுகமு பொந்து
கலிமிலேமிரெண்டு கலதெந்தவாரிகி
பலிமி புத்திரபலிமி பலிமிவேமா.

(பொருள்.) மங்கையரினவள் தன் நாயகன்காலத்தில் அன்னவஸ்திரத்திற்கு துன்பப்படுவாளாகில், பிறகு பிள்ளைகள் கால

த்தில் சௌக்கியப்படுவாள். பாக்கியமும் இல்லாமையும் எல்லாரும் அனுபவித்துதான் தீரவேண்டும். மாதருக்கு புத்திர சம்பத்தின் பலமே மேலானபலம் என்றவாறு. 42

ஆறுருசுலு வேறு ஸாரம்புயொக்கடி
ஸத்தியநிஷ்ட வேறு சத்யமொகடி
பரமருஷுலு வேறு பாஹ்யுண்டு யொக்கண்டு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) ஆறுவிதமான ருசிகள்யிருந்தாலும் அதின் சாரமெல்லாம் ஒன்றே. அதாவது அந்த ஆறுவிதமான இனிவுகளையும் நாக்கால்தான் அறிதல்வேண்டும். யதார்த்த நெறி அறிய வெவ்வேறுமார்க்கங்கள் யிருக்கினும் இவைகளின் பொருளெல்லாம் சத்தியத்தையே வெளியாக்கும். யோகீஸ்வரர் முதலானவர்கள் நாமரூபகிரிகைகள் உள்ள வித்தியாசமான திரேகங்கள் உடைத்தாயிருந்தாலும், அவர்களுக்குள் இருக்கும்படியான பரமாத்துமசுரூபம் அபேதமாயிருக்கும் எ-று. 43

இட்டிகனுல பிரம்ம மெட்லுகூடகவச்சு
குசுகனுலுவேறு கூபுவேறு
கூபுலோனமறசி கூடங்கவலவதா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) மாயாபிரகுருதியில் ஆழ்ந்து ஆசையென்ற எமபாசத்தால் கட்டுண்டு, சம்சாரமென்கிற நரகத்தில் விழுந்து அலேந்துக்கொண்டு, அதற்கு என்னசெய்தால்விர்த்தியாகுமென்று காமாதி ஆறுதிருடர்களை பங்காளிகளாக்கிக்கொண்டு அவர்கள் தன்பேரில் துவேஷம் தொடரப் போகிறார்களென்ற பயத்தால், அவர்கள் மனம் நோகாமல் கருதினமாத்திரத்தில் வேலைவெட்டிகளைச்செய்ய ஞானேந்திரியங்கள் முதலானவைகளை அடிமையாக்கியிருக்கிற மனிதன் இந்த காமக்கண்ணினால் பிரமத்தை பார்க்கக்கருதினால் எப்படிபார்க்கமுடியும். அப்படி பிரமத்தைதரிசிக்க அறிவுயென்கிற கண்ணினால் துருக்காய்நின்று உலக மாய்கையென்கிற தோற்றத்தை மறந்து தரிசிப்பானாகில, தடையில்லாமல் பரமாத்துமாவை தரிசிப்பான். இல்லாவிடில் பிரயோஜனமில்லை என்றவாறு. 44

தூலமுலனு போலு துரவள்தலனு யெல்ல
ரோசி யாசலன்னி கோசி வேசி

வாஸனலுடிகினவாடேபோ பிரமம்பு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) தூலங்களைப்போலொத்த சாக்கிரதை, சொர்ப்பனம், சுழுத்தி, என்கிற மூன்று அவஸ்தைகளை விட்டொழிந்து. தனேஷன, தாரேஷன, புத்திரேஷன என்கிற மூன்று ஈஷணாதிகளைப் பற்றறுத்து, உலோகவாசனை, சாத்திரவாசனை, தேகவாசனையென்கிற மூன்றுவாசனைகளை மூலையில்தள்ளினவர்களெவர்களோ? அந்தமகானுபாவர்கள் பிரம்மமெனப்படுவார்கள் என்றவாறு. 45

ஜீவமேடனுண்டு பாவ மெக்கடனுண்டு
காபுரம்பு யேட கதசியுண்டி
தனருசுன்னயட்டி ஸ்தலமேல தெலியரு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) பிராணன் எவ்விடத்தில் இருக்கிறது. புத்தி எவ்விடத்தில் யிருக்கிறது. ஜீவனும் புத்தியும் எவ்விடத்தில் கலந்திருக்கும். ஜீவபாவங்கள் இரண்டும் சேர்ந்திருக்கிறயிடத்தை யேன் அறியமாட்டீர்கள். அதையறிந்தாலல்லவோ ஜீவன்முத்தர்களாகுவீர் என்றவாறு. 46

தனமு கூட பெட்டி தர்மம்பு ஸேயக
தானுதினக லெஸ்ஸ தாசுகாக
தேனெனீகெகூர்ச்சி தெரவரிகிய்யதா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) தேனீ பல புஷ்பத்தின் இரசத்தைச் சேர்த்து தேனாக்கி தான் பானம் பண்ணாமல் வழிப்போக்கனுக்கு எங்கனம் கொடுக்கிறதோ; அங்கனம் லோபியானவன் பணத்தை சேர்த்து தானதருமங்கள் பரோபகாரங்கள் ஒன்றுஞ்செய்யாமல், தானுந் தன்வயிற்றுக்குச்சாப்பிடாமல் ஓரிடத்தில்புதைத்துவைத்து, திருடருக்கோ அல்லது வழிப்போக்கருக்கோ இழந்துவிடுகிறான், ஆனதால் தனார்ஜஜனைசெய்தபிறகு ஆத்துமதுரோகம்செய்யாமல் தன்னால் கூடியமட்டும் பரோபகாரார்த்தமாய் சிலது தானதருமங்கள்செய்து பணத்தைச்சேர்த்துவைத்தல் நலம் என்றவாறு. 47

இச்சேவாரலசம்பத
ஹெச்சேதேகானி லேமி யேலாகலுகுன்
அச்சலம நீள்ளுசல்லின
விச்சலவிடி னூருநுண்டு வினுராவேமா.

(பொருள்.) ஆற்றில் பள்ளம்தோணடி அதில்வுள்ளநீரை இறைகக இறைக்க ஊற்றால் சலம்எப்படி சுரந்துக்கொண்டேயிருக்குமோ, அப்படி தானதருமங்கள் செய்பவனுடைய பணம் மேன்மேலும் விருத்தியாகு மல்லது, ஒருகாலமும் நாசமடையாது என்றவாறு. 48

பாலகலயுநீரு பாலய்யிராஜில்லு
நவியு பானயோக்கிய மைனயட்லு
ஸாதுஸஜ்ஜனமுல ஸாங்கத்தியமுலசேத
மூடஜனுடு முக்தி மொனயுவேமா.

(பொருள்.) பாலுடன்கலந்த ஜலமும் பாலாய்த்தோன்றிபானத்திற்கு எவ்வளவு யோக்கியமாய் இருக்கிறதோ, அப்படிசாது ஜனங்களின் சேர்க்கையால் அறிவில்லாதவனும் அறிவுள்ளோனாய் ஜீவன் முத்தனாவான் என்றவாறு. 49

செடினமானவுலனு சேபட்டிஇரக்ஷின்சி
கடகுசேர்ச்சினட்டி கனுடு தலப
சடகிபுண்ணியமைன கலசிவுஸன்னிதி
நெடதெககயுந்து ரெபுடுவேமா.

(பொருள்.) மாய்கையில்சிக்கி அலைகிற சனங்களை கிருபையால் ஆட்கொண்டு பாசத்தை அறுக்கவழிக்காட்டி அவர்களை ஜீவன் முத்தராய்ச்செய்த மகானுபாவர்கள் சதா அகண்டபரிபூரணசச்சிதானந்த பரமாத்துமசுரூபமான சிவனது சன்னிதானத்தில் சதாவிளங்கிக்கொண்டு இருப்பார்கள் எ-று. 50

ஒகரிநோருகொட்டி யொகருபக்ஷின்துரு
வாரிநோரு மித்தி வருஸகொட்டு
சேபபிண்டுநெல்ல சேபலு சம்புனு
ஜனுடு சேபலநெல்ல ஜம்புவேமா.

(பொருள்) சிறியமீன்களை பெரியமீன்கள்பிடித்து தின்கின்றன. அந்தப்பெரியமீன்களை மனிதர்கள் பிடித்து தின்கிறார்கள். அப்படியே ஒருவனை மோசம்பண்ணி ஒருவர் அபகரித்தால்

அவர்களைமோசம்செய்து இன்னொருவர் அபகரிக்க கார்த்துக் கொண்டிருக்கிறார். ஆனதால் ஒருவனையொருவர் மோசம்பண்ணக்கூடாது. அப்படி மோசம்செய்வார்களாகில், அவர்களிடத்திலிருந்து மற்றவர்களுக்கும் பிடுங்கிக்கொடுக்கத் தேவன்கார்த்துக்கொண்டிருக்கிறார் என்றவாறு. 51

பரக ருதிகுண்டு பகலகொட்டகவச்சு
கோடலன்னி பிண்டி கொட்டவச்சு
கடினசித்துனிமனஸு கரகிம்பராதயா
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) விசாரிக்குமிடத்தில் பாராங்கல்லை தூளாய்இடிக்கலாம், சுவர்களை எல்லாம்தவிடுப்பொடியாக்கிவிடலாம். எள்ளளவும் இரக்கமில்லாத மனிதனுடைய மனதை இரக்கம் உண்டாகச்செய்ய யாராலும்முடியாது என்றவாறு. 52

சிவமந்த்ர மூலகெல்ல விவரிம்ப ஹரிகுருவு
ஹரிமந்த்ர மூலகெல்ல ஹருடு குருடு
குருவுனியெருகனி குணஹீனு டெமெருகு
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) ஆலோசிக்கையில் சிவனது மந்திரங்களுக்கெல்லாம் மால்போதாசாரியாயிருக்கிறார். விஷ்ணுவின்மந்திரங்கட்கெல்லாம் ஈசன்போதாசாரியாயிருக்கிறார். என்றால் சிவனை விஷ்ணுதுதிசெய்ததாகவும், திரிபுராந்தகன் மாலை துதித்ததாகவும், சிலபுராணங்கள்முறையிடுகிறது. சிவன்என்றாலும் விஷ்ணுயென்றாலும், ஓரேபொருளைவிளங்குமென்று தெரியாத மூடர்களியாவரும். விஷ்ணுவுக்கு பரத்துவமுளதென்றும், மற்றதேவதைகள்யாவும் உண்டாக்கப்பட்டு யுகமுடிவில் நாசமாகுமென்றும்சொல்லுவார்கள். மற்றவர்கள் சிலர் சிவனே பரத்துவமென்றும் அவனைவிட வேறுயாருங் கிடையாதென்றும் மற்றதேவர்களைதூஷிப்பார்கள், சிவன் விஷ்ணு என்கிறபதத்திற்கு (லக்ஷியார்த்தமாய்) பொருள் கொள்ளாமல் நாமரூபகிரிகைகள் உள்ள தேகபேதங்களை வகித்துக்கொண்டு வீணில்சண்டைசெய்கிறார்கள். சிவன்என்கிறகுறியையும் விஷ்ணுயென்கிறகுறியையும் அறியாதமூடன் அந்தபரமாத்தும சுரூபத்தின் பேதங்களை எப்படி அறியமாட்டுவான என்றவாறு. 53

வர்ணாஸ்ரமமுலகு வதருது குருவனுசு
மரணமெருகலேனி மாலவானி
குருவனுசு தனுசெப்ப குரிகாததெந்துனு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிறஜாதிகளில் எதி, வானபிரச்ஸ்தன், சன்னியாசி, முதலிய வேஷங்கள்கொள்பவரைமதாசாரியரொன்று, சனங்களெல்லோரும் அந்தவேஷக்காரர்களை மிகவும் மேன்மைப்படுத்தி பரமாத்மசுரூபத்தை அறிந்தவர்களைப்போல் அவர்களை தரிசித்துதொண்டுபணிவிடை செய்துக்கொண்டுவருகிறார்கள். தன்மரணவஸ்தையை தனக்குத்தெரியாத நீச்சனே ஆசானென்று சொல்லுவது அறிவுடையோருக்கு அழகல்ல, குறியைக் கண்டவர்களைத்தேடி தரிசித்தல்நலம் என்றவாறு. 54

முரிகிலோனேபுட்டி முரிகிலோனெபெரிகி
முரிகிபிரதுகுசுன்த முரிபெமேல
முரிகிதெலிசினவாடு முரிகினி புட்டுனு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) துர்க்கந்தத்தில்தானே பிறந்து அசுசியாகிய மாய்கையில்தானே வளர்ந்து, அலைகிறவனுக்கு துர்க்கந்தமான மாய்கையாகிய வாழ்வைப்பற்றி தான் கருவங் கொள்ளவேண்டிய காரணமியாது. இந்தஉலகவாழ்க்கை மாயாபிரகிருதி யென்று அறிந்தவன் மறுபடியும் இந்த அசுசியில் உதிப்பானு? உதிக்கமாட்டான். எத்தனைகாலம் அகங்காரகிரந்தியில் புரளுகிறானே, அந்நாள்வரைக்கும் ஜன்மங்கள்எடுத்துதான் தீரவேண்டும். எப்பொழுது அதைப் பற்றறுக்கிறானே அப்பொழுதுதான் ஜீவன்முத்தனுவான் என்றவாறு. 55

யன்பதினாலுகுலக்ஷலு
யனபரகின ஜீவராஸுலந்துனு முனுலா
ஜெனியின்சுவிதமு தெலசின
மனுஜண்டெ விவேகியனரு மஹிலோவே.

(பொருள்.) எண்பத்து நாலுலக்ஷத்து சீவராசிகளில் முனிகள் எப்படி உதித்தார்கள். எந்தவிதத்தால் அவர்களுக்கு

முனிஎன்கிறபேர்வந்தது, குலத்தினாலேயா? அல்லது வேஷத்தினாலேயா? அல்லது அறிவை அறிந்ததினாலோ? என்கிற விஷயத்தை செவ்வையாய்யோசித்துத்தெரிந்த மனிதன் உலகத்தில் நீதிமான்எனப்படுவான் என்றவாறு. 56

தல்லிகர்ப்பமந்து தா வெடலினப்புடு
மொலனு பட்டலேது மொனஸிகூட
நடமபட்ட கட்ட நகுபாடுகாதகோ
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) தாயாரின்உதரத்திலிருந்து வெளியில்வந்தபொழுது நாம் இடுப்பில் ஏதாவது வஸ்திரங்களை தரித்துக்கொண்டுவந்தோமா? இல்லையே; அப்படியிருக்க பிரக்கும் பொழுது இல்லாத வஸ்திரத்தை நடுவில் கட்டுகிறது நாலுபேருக்கு சிரிப்பாயிருக்காதா என்றவாறு. 57

கண்டிமண்டிசாத காமுனிகெல்சியு
பெண்ட பாயலேடு பெத்தவேல்ப்பு
பெண்ட பாஸினட்டி பெத்தலு கலரகோ
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) காமத்திற்கு அதிபதியாகிய மன்மதனை சிவபெருமான் மூன்றாங்கண்ணாகிய நெற்றிக்கண்ணினால் தகித்தும் தான் விரகத்தைசகிக்காமல் ரிஷிபத்தினிகள் முதலானவர்களை சையோகஞ்செய்யத்தொடங்கினார், அப்பேர்க்கொற்ற மகாதேவரே அந்த விரக வேதனையை சகிக்கமாட்டாமல் இருக்க, காமாதி விஷயாதிகளை ஒழித்த பெரியவர்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்களா என்றவாறு. 58

அதராம்ருதமு ஜூசி அன்னியு மரசுனு
தருணிரூபு ஜூசி தன்னு மரசு
யோனிஜூசி பரமயோகம்பு மரசுரா
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) மங்கையரின் அதரா மிருதத்தைப் பார்த்து புருஷன் உலகவிஷயாதிகளை மறக்கிறான். தையலரின் உருவத்தைப்பார்த்து தன்னைமறக்கிறான். யோனியை தரிசித்தமாத்

திரத்தில் சிரேஷ்டமான ஜீவஆத்தும சந்தானத்தைக்கூட மற ந்துப்போகிறான். ஆனதால் ஆடவரின் உருவமே தன்னை நா சம்செய்யும் பெரும்பூதமாய் இருக்கிறதென்றவாறு. 59

பத்தமோசெ நொகடு பத்தமேசெ நொகண்டு
பத்த ரொம்முனகட்டி பரகெஞெகடு
பத்தரோஸினவானி ப்ரபுனிகா ஜடுடீ
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) சிவன் மாய்கையாகிய கங்கையை சிரசில் தரித் துக்கொண்டு இருக்கிறார்; அயன் சரஸ்வதியை வாயில்வகித் துக் கொண் டிருக்கிறார்; திருமால் லட்சுமியை மாரோட ணைத்துக்கொண் டிருக்கிறார்; ஆனதால் நாம் திரிமூர்த்திசுரூப மாய்கொண்டஹரிஹரபிரமாதிகளும்மாய்கையைவிட்டு அகலா மல் மாய்கைக்குள்ளாகி யிருக்கிறார்கள். ஆனதால் மாய்கையை ப்புரம்பாக்கிய பரப்பிரம சைதன்னியத்தை பரமாத்துமா சுரூ பமாய்க் கருதுங்கள் என்றவாறு. 60

ஈத கிஞ்ஜவண்ட்டி இஸுமந்த யோனிகி
ஆசபடெடுவாடு அல்பஜனுடு
தீனிவிடிசினட்டி தீருலுஎவரயா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) ஈச்சம்பழத்தளவுள்ள யோனியை கருதுகிறவன் மூடனல்லது அறிஞன்அல்ல. மாய்கையாகிய இந்த சம்பந்தத் தைஒழித்த மகானுபாவர்கள்யாராவது உலகத்தில் யிருக்கிறார் களா என்றவாறு. 61

நெலநெலகுனு யோனி நெத்துருகாருனு
ஊஷ்ணமெத்தினபுடு வுருகு சீமு
உத்தப்புடெல்லனு உச்ச காருசுனுண்டு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) மாதம்மாதம் பிரவிடை ஆகும் பொழுது யுவ் கையர்க்கு யோனியிலிருந்து இரத்தம்ஒழுக்கல்கொண்டு இரு க்கும். சூடுஆனபொழுது அதிலிருந்து சீழ்வரும். மற்றவேளை எல்லாம் மூத்திரம் ஒழுகிக்கொண்டுஇருக்கும். இவ்வளவு

துர்கந்தமாயும்,பார்க்கஅசுத்தமாயும் கேழ்க்கவெறுப்பாயும் உள்ள யோனியை புருஷாள் கோருகிறார்களே என்ன ஆச்சரியம் என்றவாறு. 62

அத்தமாமலஉச்ச ஆலுகா ஜன்மின்செ
ஆலுமகனிஉச்ச ஆயேஸ-துடு
உச்சபிரதுகுகின்த உத்ஸாஹமேலயா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) மாமன் மாமியாரவர்கள் இருவரின் மூத்திரமானது தனக்குமனவியாகபிறந்தாள். நாயகன் நாயகியுடைய மூத்திரம் பிள்ளையாய் உற்பவிக்கிறது: இந்ததேகம் மூத்திரத்தினல்உண்டானதென்றும் துர்க்கந்தத்தை உடையதென்றும்அறியாமல் ஆணவம் கொள்வது அழகா? என்றவாறு. 63

உச்சலோனெபுட்டி உச்சலோணெபெரிகி
உச்சகாஸஸேயு வோகு கலபெ
உச்சரோயுவாடு உத்தமயோகிரா
விஸ்வதாபிராம வினுர வேமா.

(பொருள்.) மூத்திரத்தில்தானே பிறந்து மூத்திரத்தில்வளர்ந்து திரும்பஅந்த மூத்திரதுவாரத்தைகோரும்படியான மூடன் இருக்கிறானா? மாயாமயமாகிய அந்தமூத்திரத்துவாரத்தை வெறுக்கிறவனெவனோ? அவன்தான்சிரேஷ்டமான யோகீஸ்வரன் எனப்படுவான் என்றவாறு. 64

கச்சலு காமுலு கூடிக
த்ரச்சங்கா ஜகமுபுட்டெ தாதலநாடின்
இச்சட குலஜாண் டெவ்வடு
கச்சரிதமு அந்தரனுசு சாடரவேமா.

(பொருள்.) தையலரும் புருஷாளும் இரண்டுப்பேர் சம்போகத்தினல் ஆதியிலிருந்து இந்த உலகம் உண்டாச்சுது. சம்போகத்தினல் உண்டான உலகத்தில் பிராமண னென்றும் மிலேச்சனென்றும் ஏதாவது வித்தியாச முண்டா? பிராமணனும் அந்த யோனியினிடமாகத்தான் பிறக்கிறான்; பறயனும் அவ்வண்ணமே பிறக்கிறான்; யோனியிலிருந்து பிறக்கிற ஒ-

வனை மேலோனென்றும் மற்றவனைக் கீழோனென்று சொல்வது அழகன்று, எல்லாரும் யோனியில் சிசின நாடணத்தினுல் பிறந்தவர்களொழிய வேறல்ல. ஆனதால் எல்லாரும் ஒரேகுலத்தாரல்லது பேதமானகுலம் கிடையாதென்று சகலருக்கும் தெரியச்சொல்லுங்கள் என்றவாறு. 65

தோலு தோலுன பெட்டி தோமங்க தோமங்க
முரிகி காரிகாரி முத்தகட்டு
முத்த சங்கபெட்டி முத்தாடனுயரா
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) சருமத்தின்பேரில் மற்றொரு சருமத்தை வைத்து அறைக்க அறைக்க நீர்கசிந்து அழுக்கெல்லாம்சேர்ந்து உருண்டையாயிற்று. அந்த அழுக்குருண்டையை அக்களில் எடுத்துக்கொண்டு ஆசை அன்புகள்பாராட்டி முத்தங்கள்கொடுத்து உச்சி முகருகிறோமே இது யென்னவிபரீதம். இந்த விபரீதத்தை யாராவது அறிந்தார்களா. என்றவாறு. 66

மலமூத்திர இரக்தாதி மாம்ஸயுக்தம்பைன
முட்டு குண்டநீள்ள முன்சனேமி
பைமுரிகி போவுனு லோமுரிகி போதயா.
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) மலம், மூத்திரம், இரத்தம், மாமிசம் முதலான வைகளைச் சேர்ந்திருக்கிற தீட்டு, ஒரு மிடாஜலத்தினுல் போகுமா? தேகத்தின்மேல் படர்ந்திருக்கும் அழுக்கு போகு மல்லாது உள்புறமாயிருக்கிற மேற்சொன்னவைகள்ஒழியாது. நாம் மேலுக்குமாத்திரம் தீர்த்தமாடினோம், சுத்தம் என்றல் உள்புறமாக மலமும், மூத்திரமும், கெட்ட இரத்தமும் இன்னம் அநேக விஷயாதிகள் அப்படியேயிருக்கிறது. உள் சுத்தி செய்தால்தானே சுத்தியென்று நினைக்கப்படும். மேல்சுத்தியால் அழுக்குமாத்திரம்தானேபோகும், உள்ளழுக்கு இந்த சடலம் இருக்கிறவரையிலுமிருக்குமல்லதுவிட்டகலாது-எ-று. 67

முட்டுலோனெபுட்டி முட்டண்ட்டுனகு ரோசி
வட்டிதீர்த்தமு நாடு வாறுகாளி

முட்டு குண்டநீள்ள முன்சின சுத்தவுனெ
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) சுக்கில சோணிதமென்று நாமதேயங்களுடைய இரத்தத்தால் நாம்பிறந்து அந்த யிரத்தம் மாதமாதம் ஒழுகும்பொழுது அது துச்சமென்றும், திட்டென்றும், தொடப்படாதென்றும், தீர்த்தமாடினல்தான தொடலா மென்றும், வீணாய் பயித்தியம்பிடித்து சொல்லுகிறோமே? அது எப்பொழுதும் உள்ளிருக்கும்பொழுது அவர்களைதொடலாமா அல்லது ஒருமிடாசலத்தினுல் அந்தவொழுக்கு சுத்தமாகிறதா? எ-று 68

தருணியங்கமெல்ல புருஷுண்டெறுங்குனு
புருஷுநவயவமுல பொலதினெறுகு
சோக கட்டகுன்ன கொலதினி சிக்சவுனு
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) பெண்பாலின் தேகங்களியாவும் புருஷனுக்குத் தெரிந்தேயிருக்கிறது புருஷாளின் அவயவங்கள் யாவும் மங்கையர்க்குத் தெரிந்தேயிருக்கிறது; புருஷன்பார்க்காத அங்கம் மங்கையரிடத்தில்ஒன்றுமில்லை; மங்கையர்தெரிசிக்காதஅங்கம் புருஷனிடத்தில் ஒன்றுங்கிடையாது. அப்படியிருக்கஆடைஉடுத்தாமல்போனல் வெட்கம் ஆண்பெண்களுக்கு உண்டாகிறது யாதுகாரணத்தினலே தெரியவில்லை என்றவாறு. 69

மாடமருகுஸிக்கு மனுஜலோகம்பெல்ல
சீரெமருகுஸிக்கு ஜெப்பனேல
பட்டபைடஸிக்கு பண்டஸம்சாரம்பு
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) இவ்வுலகத்தில்வெட்கமென்றது வார்த்தையிலிருக்கிறதல்லது யதார்த்தமாய் ஆடையில்கிடையாது புருஷனுக்குவெட்கம் மங்கையர்கள் தனது இரகசியபாகத்தைப் பார்க்கக்கூடாதென்பதும், மங்கையர் தமது இரகசியபாகத்தை புருஷன்தரிசிக்கக்கூடாதென்பதாம். இருவருக்கும் ஒருவரையொருவர் தரிசித்தல்மாத்திரத்தில் வெட்கம் உண்டாகும்பொழுது சேர்க்கையிருக்குமா? சேர்க்கையில்லாமற்போனல் புத்திராதி

படயநேர்ச்சினலஞ்ச பங்காரமாஸிம்சு
மாடகுவல்சுனு மஹிமகாக
கொரசநேர்ச்சின பர்ரெ கோஙிதே சேபுனு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) சோரம்போய் பணம்சம்பாதிக்க கருதின தாசி பணம் கிரகிப்பாளல்லது நமது வெறும் வார்த்தைகளுக்கு மோகித்துவருவாளா? யாரைப்பார்த்தாலும் கடிக்கஅப்பியாசித்தஎருமை அதைசொரிவதினால் கடிக்காமல்நக்குமா எ-று. 77

விடுடு தாகுவேஸி விடிசிபெட்டின லஞ்ஜெ
பீதவிடினிதகிலி பிரியமுசேயு
குப்பலோனிசெப்பு குக்க கன்னட்லயா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) குப்பையிலிருக்கும் பாதரக்ஷையைப் பார்த்து நாயானது அன்புடன் கவ்விக்கொண்டு சந்தோஷிக்கிறதுபோல் ஒருபுருஷனிடத்திலிருந்து அவனால் அடிக்கப்பட்டு துரத்தப்பட்ட வேசியானவள் ஏழைநாயகனைச்சேர்ந்து மிகவும் அன்புடன் பாராட்டுவது என்றவாறு. 78

முண்டகோஷ்டிசாத முனுகுசுதேலுசு
உண்டவலயுமோஹ முன்னதாக
அண்டபாஸினபுடு ஆசிம்ப பனிலேது
விஸ்வதாபிராமவினுரவேமா.

(பொருள்.) நமக்கு மோகமிடை அகலாம லிருக்கிறவரைக்கும் நாம் மாதரின்சேர்க்கையில் அவஸ்தைப் பட்டுக்கொண்டு அலைந்துகொண் டிருக்கவேண்டும் எப்பொழுது மோகம் நம்மைவிட்டு அகலுகிறதோ அப்பொழுது நாம் மாதரைக்கோற வேண்டிய தவசியமில்லை என்றவாறு. 79

ஸ்திரீலசண்ட்லு பூலசண்ட்லகு போல்துரு
பாலுமாலியைட்டி பர்துலெல்ல
க்ரந்து லெட்லு பூலபந்துலீ போல்துரு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) மங்கையரின் கொங்கைகள் பூச்செண்டுகளுக்கு சமமென்று இலக்கணயிலக்கியம் வாசித்த பாமரர்கள் அலங்கார சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறார்கள். கேவலம் துர்க்கந்தமாகிய மாமிசப்பிண்டம் சுவாசனையுடைய மலர்ச் செண்டுகளுக்கு எவ்வண்ணம் ஒப்பிட்டார்களோ தெரியவில்லை. ரூபத்தில் கொங்கையோ மாமிசப்பிண்டமா யிருக்கிறது; வாசனையி லென்றால்கொங்கைகளோ தேகானுசாரம், துர்நாற்றம் உண்டாயிருக்கிறது. புஷ்பமோ சுகந்தம் வீசுகின்றது என்றவாறு. 80

பதவிகல்கினலஞ்ச பைதானெபடுகாக
எந்துலின்தமாட கேலவலசு
குடிசிமரிகினபர்ரொ கூசிதேபோவுனு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) எவ்வண்ணம் ஒருயிடத்தில் புல்லை மேய வழக்கப்பட்ட எறுமையானது; கூச்சல் போட்ட போதிலும் போகாமல் அவ்விடத்திலேயே மேய்ந்துக்கொண்டிருக்குமோ? அப்படி நாம்பாக்கியவந்தராயிருந்தால்மாத்திரம் வேசியானவள் தானாகவே நம்மேல் விரகம்பூண்டவள்போல் அபினயித்து இருக்கிற பணத்தை அபகரிப்பாளல்லது ஏழையாய் இருந்தால் அவள் நம்மை இச்சிக்கவேமாட்டாள். நாம் அவளுடன் சம்போகிக்க வேண்டினாலும் உடன் படவேமாட்டாள் எ-று. 81

பக்திகல்கினலஞ்செ பலுமாறுபிலசின
பக்திகாததி காலம்ருத்யு காணி
மிருத்துயுஜொச்சினயில்லு ம்ருங்ககபோவுனு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) எப்படி தண்டுமாரிபுகுந்தவீடு நாசம்பண்ணாமல் திரும்புகிறதில்லையோ, எல்லாரையும் பலிவாங்கிக்கொண்டு திரும்புகிறாளோ, அப்படி மிகவும் ஆசைப்பாராட்டி அதிகவினயத்துடன் பலதகுதி நம்மை அழைக்கிறவேசியானவள் நம்மிடத்தில் இருக்கும் பணத்தை கிரகித்துக்கொண்டு நம்மை ஓட்டாண்டியாக்கக் கருதி கூப்பிடுகிறாள்; ஆகையால் அவள்

செய்யும் வினயத்திற்கும் பசபசப்புக்கும் மோசம்போகாதீர்கள். உங்களை அனுதியாக்கிவிடுவாள் ஜாக்கிரதைஎன்றவாறு. 82

பங்கஜாக்ஷுலகன்ன பங்கருபொடகன்ன
திம்மபட்டுயோகி நம்மராது
மனஸுனிலிபினவாடு மரி பரமயோகிரு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) மங்கையரைப் பார்த்தாலும் பொன்வெள்ளி நாணயங்களைப்பார்த்தாலும் மிகஆவலுடன் ஆசைப் பாராட்டும் யோகிகளை நம்பப்போகாது. சம்சாரவாழ்க்கையி லிருந்தாலும் மனதுநிறுத்தினவனெவனோ? அவன்தான் பரமயோகீஸ்வரன் எனப்படுவான்; மற்றவர்கள்யோகியாயிருந்தும் மனசஞ்சலவிகற்பமுடையவர்களாயிருந்தால் அவர்களை வேஷதாரிஎன்று சொல்லவேண்டுமல்லதுயதார்த்தமானயோகியென்று சொல்லப்படாது என்றவாறு. 83

விப்ருல புல்லெலு விடி குக்கல பாலு
மாலல புல்லெலு மன்துகெட்டு
மன்துகெக்கினபுல்லெ மாலபுல்லெந்துரா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) பிராமணருடைய எச்சிலைகளை ஊர்நாய்கள் தின்னுகின்றன. தீச்சசாதியாராகியபறையருடைய எச்சிலைகள்பரணையின்பேரில் ஏறுகின்றன. பரணையின்பேரில் இருக்கிற எச்சிலைகள் பறயருடைய எச்சிலைகள்யென்று சொல்லலாமா என்றவாறு. 84

தன்னுகன்னயட்டி தல்லிவண்டி திரும்பி
அன்யகாந்தலெல்ல அரசுசூட
கன்னதல்லினி ஜனுலு கானங்கலேரயா
விஸ்வதாபிராம வினுர வேமா.

(பொருள்.) விசாரிக்கையில் தன்னைப்பெற்ற தாயார்போல் இதரமானஸ்திரீகளை நினைக்கவேண்டும். தன்னைப்பெற்றதாயா

ரை உலகத்தார்தெரியாமல்இருக்கிறார்; தன்னைப்பெற்ற தாயா ரை உலகத்தார் தெரிந்துக்கொண்டால் இதரமான ஸ்திரீகளி ன்பேரில் ஆசைப்பாராட்டமாட்டார்கள் என்றவாறு. 85

எட்டெடு ஸதிவல பெருகுனெ
ஜட்டம்படி திருகுகர்க ஜாணுணடகுநு
அட்டமு திட்டமு திரிகே
தெட்டெருகுனெ பாலதீபி தெல்லமுவேமா.

(பொருள்.) எப்படி மத்தானது பாலைகடைந்தபோதும் அதின் மதுரத்தை அறியமாட்டாதோ, அப்படி மூர்க்கனானவன் அ னேகமாதுக்களைப் புணர்ச்சிசெய்தும் கோதையின் இரதிசுக த்தைதெரிந்து அவள்மனதைச் சந்தோஷம்பண்ணமாட்டான் என்றவாறு. 86

புடகனு பெஞ்ஜமுபுர்நக
புடகனு தருவக அக்கினி புட்டினபங்கின்
விடுவக பணதுலகூடிரி
நொடரின விராஹாக்கிபுட்டு நோடனெவேமா.

(பொருள்.) ஒரு கட்டையை துவாரஞ்செய்து அதை மறு கருவியால் கடைக்கடைக்க நெருப்புஎப்படி உண்டாகுமோ? அங்ஙனம் விடாமல் மங்கையரின் சேர்க்கையால் தேகத்தில்வி ரகாக்கினி பிறக்கும் என்றவாறு 87

வாடஸத்வமெல்ல வாரிசமுத்திரமு வேமா
பண்டி ஸத்வமெல்ல பட்டடை
ஆடுவாரிஸத்வ மாடனேசெல்லுரா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) படவின்ஓட்டம் ஜலத்தில் அல்லது கரையில் கி டையாது. வண்டியின்ஓட்டம் நிலத்திலல்லது ஜலத்தில் கிடை யாது. அப்படியே பெண்களின் ஓட்டமெல்லாம் புணர்ச்சியில ல்லது வேறுவிஷயத்தில் கிடையாது என்றவாறு. 88

ஜாணுலேபுருஷுலு சபலாயதாக்ஷுலு
வலபுல ரசி தெலியவலயுகாக
முரிகிதோலுகென்த கருவுகொன்னரகோ
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) புத்திமான்களான புருஷாள் ஸ்திரீகளின் விரகத்தைத்தெரிந்து அவர்களுடைய மனதைப் பிரீதி பண்ணவேண்டுமெல்லது துர்நாற்றமான தோலுக்கு ஆசைப்படக்கூடாது அப்படி தோலுக்கு ஆசைப்படுங்கால் தாங்கள் அடையும்படியான பிரயோசனம் ஒன்றுமில்லை என்றவாறு. 89

ஸதுலமாயஜூசி சாலின்செ பைரவுடு
பெத்தகடுபுவாடு பெண்ட்லிமானெ
புட்டுகாசகட்டெ புவி நாஞ்சனேயுண்டு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) மங்கையரின் மாயா ஜாலங்களைப்பார்த்து பைரவமூர்த்தி பெண் ஆசையையொழித்துவிட்டார். விநாயகர்வெறுத்து விவாகஞ்செய்துக் கொள்ளாமல் இருக்கிறார். அனுமாரே சும்மாயிருந்தாலும் நம்மைவந்து தொடருமென்கிற பயத்தால் மல்லு வித்தைகளை அப்பியசித்தார் என்றவாறு. 90

பெக்கு சதுவு லேல தர்க்கசாஸ்த்ரமுலேல
வொக்கமனஸுதோன னுண்டனேனி
ஸர்வ ஸித்துடவுனு ஸர்வம்பு தானவுனு
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) பலவிதபாஷைகள் அப்பியாசிக்கிறதினால் யாது பிரயோசனம்? இலக்கணம் இலக்கியம், தர்க்கம், மீமாம்சாதி சாஸ்திரங்கள் வாசிக்கிறதினாலியாதுபிரயோஜனம்? விஷயானந்தம்மேலும்மேலும் அதிகரிக்குமல்லதுகுறையாது. ஒரேமனதாய் நிஷ்காமியமாய் இருப்பானாகில் சகலசித்துகளை கருதல் மாத்திரத்தில் ஆடும்படியான பரமசித்தனுவான். சகலமும்தானாய்விளங்குவான். அகண்டாபாவம் தன்னைகுடிகொண்டிருக்கும் என்றவாறு. 91

அதராம்ருதம்பனுசு யாபெதவி கொருகுதருந்
சொங்க கடுபுலோன சொரவகானு
மலமுதித்திமீத மனஸெட்லு புட்டொா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) உலகத்தில் புருஷர்மங்கையரின் உமிநீர் தங்கள் வயிற்றுக்குள்போகும்படியாய் உதட்டைக்கடித்து (அதராமிருதம்) பானம்பண்ணினோமென்கிறார்கள். துர்கந்தமானஉமிநீர் எப்படிஅமிர்தம்ஆயிற்றோ தெரியவில்லை துர்நாற்றமுள்ள தோலின்பேரில் இவ்வளவுமனதுஏன் உண்டானதோ அதுவும் தெரியவில்லையே என்றவாறு. 92

ஞானிகி கர்மம்பேடிகி
ஞானிகி கர்மம்புவலது ஸத்புருஷலகுன்
ஞானமெ கர்மம்பைனனு
மானவுலகு முக்திகல்கு மஹிலோவேமா.

(பொருள்.) அறிவுடையோனுக்குக்கருமம்வேண்டியதில்லை (கர்மம்என்றால் மதத்தில்சொல்லியிருக்கும்படியான யக்ஞயாகசந்தியானுஷ்டான ஜெபதபங்கள்); அறிஞருக்கு அறிவு என்கிறகருமம்வேண்டியது. அறிவு என்கிறகருமம எங்கசத்புருஷன்கையாளுகிறானோ? அவனுக்கு இந்தவுலகத்தில்தானே ஜீவன்முத்தி சித்திக்கும் எனறவாறு. 93

கோசிதிசெனனுசு கோதாடலாடிம்பி
வெர்ரிவாடனி ஊருவெள்ளகொட்டி
தருணுலயடலனு தமகோசிவிடுவரா
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) யாராவது பரபிரம்மானந்தபோதையால்அகண்டாபாவத்தைஅடைந்து விஷயாதிகளைபற்றறுத்து திரியும் பரம ஹம்ஸர்கள் மானாபி மானங்களைக் கருதாமல் கௌபீனம்கூட தரியாமல் நிர்வாணமாய் திரிந்தால், அவனைப் பார்த்து ஜனங்கள் பயித்தியக்காரனென்றும்வெட்கமில்லாதவனென்றும்

வாயிற்கு வந்ததெல்லாம் திட்டி குரங்கு ஆட்டமெல்லாம் அவனை ஆட்டிவித்து அந்தமகானுபாவனை ஊருக்குபுறம்பாக்குகிறார்கள். அவர் நிர்வாணமாய் தனது சிசினத்தை மங்கையருக்குக் காட்டுகிறார் என்றும் அவனை தூரத்தும் யோக்கியான், தாங்கள் தங்கள்மனைவிகளிடத்தில் கௌபீனத்தை அவிழ்த்துக் காட்டாமல் இருக்கிறார்களா? மாதுக்களும் பார்க்காமல் யிருக்கிறார்களா? ஒருவருக்குயிருக்கும் சிசினம்போல்தானே உலகத்திலுள்ள புருஷாளுக்கெல்லாம் இருக்கிறது? எதாவது அதின்உருவத்தில் வித்தியாசம்யிருக்கிறதா; கருதிப்பாராமல்சனங்கள்விஷயானந்தத்தில் ஆழ்ந்துகிடக்கிறார்கள் என்றவாறு. 94

ஆலிசிக்கு ஜெருநா நகிலயக்ஞமுலந்து
தல்லிசிக்குஜெருக தந்தினமுல
காருசாயககர்ம காண்டம்பு கல்பின்செ
விஸ்வதாபிராம விநுரவேமா.

45875

(பொருள்.) யாகங்கள்செய்யும்பொழுது யாகாதிபதி, (யாகம்பண்ணுகிறவன்), தன்மனைவியோடு தீக்ஷையுடன் பீடத்தில் உட்கார்ந்து யக்கியம்செய்வான். யாகாதிபதியின் மனைவி பதிவிரதாசிரோன்மணியாயிருக்கவேண்டும். இதர புருஷனைசொப்பனத்திலும் கருதக்கூடாது. நல்லொழுக்கத்தையும் பதிவிரதா தருமத்தையும அனுசரிக்கும் ஆத்துமபத்தினியுடன் யாகாதிபதி உட்கார்ந்து யாகம்செய்வானாகில், அப்பொழுதுதான் தேவர்கள் யாவரும்வந்து, தங்கள்தங்கள் ஹவிர்பாகங்களை நேரில் பெற்றுக்கொண்டுபோவார்கள். அவள் பரபுருஷாபிலாஷியாயிருந்தால் சுரர்வரமாட்டார்கள். அதினால் அவள் யாருக்கும்தெரியாமல் சோரம்போயிருந்தாலும் யாகம் செய்கிறதினால் சகலமானபேருக்கும் தன்பத்தினிபரபுருஷப்பிரமோதினிஎன்றுதானே தெரியக்காட்டினனல்லது யாகம்செய்வதால் ஒரு பிரயோஜனமும் காணோம். திவசம்முதலானகருமங்கள்செய்வதினும் தன்தாயார் தன்னைதகப்பனிடசம்பர்க்கத்தால் பெற்றிருந்தால் யாருக்கு தான் பிறந்தானோ அவனது பிதுரு தேவதைகளும் அந்த ஆத்துமாவும்வந்து இவன்செய்யும்படியான கருமங்களை பெற்றுக்கொள்ளுவார்கள். இவன்தன்தகப்பனார்பேரை

ச்சொல்லி பிண்டம் கொடுத்தும் தான்வேறு புருஷசம்பர்க்கத்தால் பிறந்திருந்தால் அவனது பிதுருதேவதைகள் வருவார்கள். அதினால் தன்தாயாரின் விபசாரத்தைத் தானே வெளியிடுகிறான். யோசிக்கையில் இந்தகருமகாண்டங்கள் ஜனங்களின் மானங்களை குறைக்கஅயன் ஏற்படுத்தினானல்லது வேறல்லஎன்றவாறு. 95

பிரும்ஹணுலகுபெட்ட பலமுக தந்துரு
குக்கலகுபெட்டிதே கொதவயோமி
இந்துஅந்து சிவுடு யேகலமையுண்டுனு
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) உலகத்தார் பிராம்மணருக்கு அன்னமளித்தால்தர்மமென்றும் புண்ணியமென்றும்சொல்லுகிறார்கள். நாய்களுக்குவைக்கிறதினால் பாவமென்ன? சர்வத்தியாமியாகிய சிவப்பெருமான் பிராமணன் உள்ளத்தில் இருக்கிறதுபோல் நாயின்உள்ளத்திலும இருக்கிறார் அல்லவா? நம்மைப்போல் அதுவும் ஒருபிராணிதானே? அதற்கு ஏன் அன்னம் இடக்கூடாது? என்றவாறு. 96

ஜனனகாலமுனாடு ஜன்னிதான்ஞனுலேவு
தனகுலைதிடி ஸர்வதா லேது
நடிமஜந்யமுலாய நருபாடுகாதகோ
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) நான்பிறக்கும்பொழுது எனக்கு பூணூல் கிடையாது எனதுபத்தினிக்கு எப்பொழுதுங்கிடையாது அப்படி இருக்க நடுவில் பூணூல்தரித்துக்கொள்வது நியாயமா நாலுபேர் சிரியார்களா கேலிசெய்யார்களா என்றவாறு. 97

ஜாதிவாரலெல்ல ஜாலவித்தியலு நேர்ச்சி
ஜாணதனமுசேத ஜானலரி
பிராம்ஹணுலையால பிரம்ஹவித்யெறுகரு
விஸ்வதாபிராம விநுரவேமா.

(பொருள்.) இதரமான ஜாதியார் அவரவர்கள்தொழில்களை அப்பியசித்து புத்தியின் கூர்மையால் தொழிலைப்பற்றி அந்தந்த ஜாதியாரெனபுகழ்பெற்றார்கள். (எப்படியெனில்) மணலால் பானைமுதலான மண்பாத்திரங்கள் செய்வதினால் குயவன்

எனபேர்பெற்றான். அந்த பெயருக்குத் தக்கபடி மண்பாத்திர ங்களை திருத்தமாயும்நேர்த்தியாயும்செய்கிறான். பிராம்மணன் எனபேர்பெற்று பிரமவித்தையை ஏன் அப்பியசிக்கவில்லை எ ன்றவாறு. 98

45875

உற்பத்திசூத்ருண்டு உத்தமோத்தமுடெட்லு
ஸதிகிசூத்ரத்வம்பு ஸர்வதானு
தல்லிசூத்ருராலு தானெட்லுபாபடோ
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) தான் பிறக்கும்பொழுது சூத்திரனாய் பிறந்தவ ன் உத்தமசாதிபுருஷன் என எப்படி அழைக்கப்படுவான். த ன்மனைவிக்கோ எப்பொழுதும்சூத்திரத்துவம்விட்டகலவில்லை தன்னைப்பெற்ற தாயாரோ சூத்திரஸ்திரீ தான், எப்படி பிராம் மணன் ஆகிறானோ தெரியவில்லை என்றவாறு. 99

தல்லி ஊர்வசிலெஞ்ச தனயாலுமாதிகெ
தானு பிராம்ஹணக தருனெஜெகதி
தபமு பிராம்ஹணுண்டு தர்க்கிம்பகுலமேல
விஸ்வதாபிராம வினுரவேமா.

(பொருள்.) தன்னைப்பெற்றத் தாயாரோ ஊர்வசி யென்கிற தேவவேசி; தனதுபத்தினியோ சக்கிலிப்பெண்; இப்படி யிரு க்க தான் எப்படி பிராம்மணனென்றும், குருவென்றும்; பிரம ரிஷியென்றும் புகழ்பெற்றான்? யோசிக்கையில் தான்செய்யும் படியானதவமே பிராமணன் என்கிறபெயரை புகழ்பெறச் செ ய்ததல்லது ஜாதிமுறையால் ஒரு பிரயோஜனமுமில்லை என் றவாறு. 100

வேமன்னபத்தியம் - ௱

மூலமும் - உரையும்

முற்றிற்று.

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்
6 FEB 1987
தஞ்சாவூர்